# அரசு

1975

1

"அரசு, மனிதனை அடக்கி ஆளும் ஆரம்பக் கருத்தியல் சக்தியாக நம்முன் எழுந்து நிற்கிறது" — எங்கல்ஸ்

பணவீக்கமும் உலக நெருக்கடியும்
என். எம். பெரேரா

அரசின் தன்மை
அனில் முனசிங்க

மோசமடைந்து வரும் உலகப் பொருளாதார நெருக்கடியில் இலங்கையின் முன்னேற்றப் பாதை
கொல்வின். ஆர். டி சில்வா

தெற்கு ஆசியாவில் தேசிய சமுதாயத்தை நிர்மாணிக்கும் பிரச்சினை
ஹெக்டர் அபயவர்தன

மார்க்ஸிய மும்மாத சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு

1975

I

| | |
|---|---|
| **ஆசிரியர் குறிப்பு** ... ... ... ... | 1 |
| **பணவீக்கமும் உலக நெருக்கடியும்** | |
| *கலாநிதி. என். எம். பெரேரா* ... ... | 8 |
| **அரசின் தன்மை** | |
| *அனில் முனசிங்க* ... ... ... | 12 |
| **தெற்கு ஆசியாவில் நேசிய சமுதாயங்களை நிர்மாணிக்கும் பிரச்சினை** | |
| *ஹெக்டர் அபயவர்தன* ... ... ... | 18 |
| **மோசமடைந்து வரும் உலகப் பொருளாதார நெருக்கடியில இலங்கையின் முன்னேற்றப் பாதை** | |
| *கலாநிதி. கொல்வின். ஆர். டி சில்வா* ... | 31 |

**ஆசிரியர்கள்:—** ஒஸ்மண்ட் ஜயரத்ன
வி. நந்தகுமார்

**தொழில் முகாமையாளர்:—**
எஸ். சிவகுருநாதன்

**ஆசிரியர் குழு:—**
ஹெக்டர் அபயவர்தன
அனில் முனசிங்க
வி. காராளசிங்கம்
ரி. விதாரண
நளின் டி சில்வா
வி. நந்தகுமார்

**விலாசம்:** ''அரசு''
457, யூனியன் பிளேஸ்,
கொழும்பு—2.

விலை: ரூ. **1.50**

**சந்தா:** வருடம் தபாற் செலவு உட்பட ரூ. 6.00
2 வருடம் தபாற் செலவு உட்பட ரூ. 11.00

**கமிஷன்:** 10 முதல் 20 பிரதிகள் வரை 10%
20க்கு மேற்பட்ட ஒவ்வொரு பிரதிக்கும் 20%

# ஆசிரியர் குறிப்பு

## எம்மைப் பற்றி

இலவசக் கல்விக் கொள்கையும், சுயமொழிக் கல்விக்கொள்கையும் நாட்டில் புதியவோர் இளைஞர் சமுதாயத்தை உருவாக்கியுள்ளது. இவர்கள் தம்மைப்பற்றியும், தாம் வாழும் சமுதாயத்தைப்பற்றியும் உலகம் பற்றியும், அறிய ஆவல் கொண்டவர்களாக விளங்குகின்றனர். முதலாளித்துவ அமைப்பில் நெருக்கடி நிலவும் காலக்கட்டத்தில் பிறந்த இவர்கள் உள்நாடும், வெளிநாடும் உறுதியற்ற எதிர்காலத்தையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும், எதிர் நோக்கியுள்ள தருவாயில் தம்மிலும், தம் வீட்டிலும், தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இச்சமுதாயத்திலும் விரக்தியடைந்த நிலையில் தம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு விடிவு என்ன என நாற்புறமும் நோக்கிடும் நிலையில் உள்ளனர். 1971ம் ஆண்டு நிகழ்ச்சிக்குக் காரணமும் இந்த விரக்தியே. மேலும் தமது பிரச்சினைகளுக்கு விடிவு காண சூழ் நிலைகள் சாதகமாக அமையவில்லை. நமது கல்வி நிலையங்கள் முற்போக்கு சுயமொழிக் கல்வி கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் பின்தங்கியது மட்டுமின்றி தாய்மொழியில் போதிய நூல்களை வழங்கத் தவறியதோடு பாடசாலைகளில் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழியை வளர்க்கவும் தவறிவிட்டது. இதன் காரணமாக இளைஞர்கள் உலக அறிவுக் களஞ்சியத்தினின்றும் விலக்கப்பட்டதுமல்லாமல் துரிதமாக அபிவிருத்தியடைந்து வரும் சமுதாய விஞ்ஞான ரீதியிலான புதிய கருத்துக்களையும், இன்றைய சமுதாயத்தையும் அதன் எதிர்காலத்தையும் பற்றியதுமான ஆய்வுகளையும், அறிய முடியாதவர்களாயிருக்கிறார்கள். 1971ம் ஆண்டு ஜனதா விமுக்தி பெரமுனையின் சிறு பிள்ளைத்தனமான நடவடிக்கை இத்தகைய கட்டுப்பாடுகளினால் உண்டான விரக்தியைப் பிரதிபலிக்கின்றது.

யுத்த காலத்தின் பின், வர்க்கப் போராட்டம் சம்பந்தமாக, மேற்கத்திய நாடுகளில் எழுந்துள்ள, அனுபவ ரீதியான கருத்து வேறுபாடுகளை சுயமொழியில் பெயர்க்க இந்நாட்டின் பாரம்பரிய இடதுசாரி கட்சிகள் தவறிவிட்டன. ஆனால் இதனிலும் மேலாக மார்க்ஸிஸவாத அரசியற் துறையில் வளமார்கருத்துக்களை - மார்க்ஸீஸ சித்தாந்தங்களைச் சுய மொழியில் மொழிபெயர்க்கத் தவறியமை குறிப்பிடத்தக்க பெரும் தவறாகும்.

தற்கால நிலை சம்பந்தமான ஒரு சில பிரசுரங்களைத் தவிர, மார்க்ஸிஸ தத்துவ விளக்கங்கள் பற்றிய நூல்கள் சுயமொழிக்கல்வி பயின்ற இளைஞர்களைப் பொருத்தமட்டில் மூடப்பட்ட ஒரு அத்தியாயமாகவே விளங்குகின்றது.

நமது ஜனத்தொகையில் இளைஞர் பெருமளவு விகிதத்தினராக காணப்படுகின்றனர். இவர்களின் ஈடுபாடின்றி சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றங்கள் எதுவும் நடைபெறும் வாய்ப்பில்லை. எனவே, இந்த இளைஞர் சந்ததியினருக்கு மார்க்ஸிஸவாத அறிஞர்களின் அடிப்படைதத்துவ விளக்கங்களை அளிப்பதும், இன்றைய சமுதாய அமைப்பில் இடம் பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களை ஆராய்வதில் இளைஞர் சமுதாயத்தை ஈடுபடுத்துவதும், இடதுசாரிகளின் தலையாய கடமையாகும். ஆதலால் இத்தகைய படித்த வாலிபர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக இந்தச் சஞ்சிகையை வெளியிடுகின்றோம்.

இந்நாட்டில் முதல் முதலாக மார்க்ஸியவாத விஞ்ஞான சமத்துவத்தை மேற்கத்திய நாட்டிலிருந்து கல்வி பயின்று திரும்பிய புதிய பரம்பரையினரான விவேகிகளே பரப்பினர். நம்நாட்டு தொழிலாளர் வர்க்கத்தை ஒன்றிணைத்து இந்த நாட்டில் புரட்சிகர தொழிலாளர் வர்க்க கட்சியினை உருவாக்கியதும் அவர்களே. புதிய பரம்பரையினர் இவர்களிடமிருந்து பெற்ற வளமார் கருத்துக்களையும் அனுபவ ரீதியில் இன்று பெறும் அறிவையும் கொண்டு தொழிலாளர் வர்க்கத்தின் அபிலாசைகளை உணர்ந்து அவர்களை அணுக வேண்டியது இன்றைய சுய மொழிக் கல்வி பயின்ற இளைஞர் சமுதாயத்தின் கடமையாகும். மார்க்ஸிஸ தத்துவத்தை இன்றைய காலக்கட்டத்திற்கும், நாட்டிற்கும் ஏற்ப பரப்புவது தொழிலாளர் வர்க்கத்தின் வழி வந்தவர்களின் கடமையாகும். இந்நாட்டின் வருங்கால புரட்சித் தலைவர்களுக்கு இந்த சஞ்சிகை சிறிய அளவிலாவது உதவுமென நம்புகிறோம்.

## அரசு என நாமமிட்டதேன்?

இம்மலரின் பெயரைக்கண்டு பலர் திகைப்படைகின்றனர் அரசு என ஏன் பெயரிட வேண்டும்? மனப்பூர்வமான தீர்க்க ஆலோசனையுடன் எடுக்கப்பட்ட முடிவு இதுவாகும். ஒரு மனிதனது தற்கால-கடந்த கால, அரசியல் சரித்திரம் அரசை மையமாகக்கொண்டு அமைந்ததாகும், மனித சமுதாயம் வர்க்க ரீதியில் பிளவுபட்டிருக்கும் போது சுரண்டுபவர்கள் சுரண்டப்படுவர்கள் என இருசாரார் இருக்கும் போது அரசை ஆயுதமாகக் கொண்டு ஆளும் வர்க்கம், சுரண்டப்படும் வர்க்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றது. அரசாங்கங்கள் மாறிமாறி வரலாம். பாராளுமன்றங்கள், அரசர்கள், ஆயுதப்படைகள், பாஸிஸ சர்வாதிகாரிகள் ஆகியன மாறி மாறி வரலாம். ஆனால் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தினது அரசாக அரசு இயங்கி வரும். மனித சமுதாய சரித்திரத்தில் அடிமையரசு, நில பிரவுத்துவ அரசு, முதலாளித்துவ அரசு, ருசியா அக்டோபர் புரட்சிக்குப்பின் தொழிலாளர் அரசு என பல அரசுகளை உலகம் கண்டுள்ளது. ஆளுவதற்கென்று ஒரு குழு இருக்குமாயின் அக்குழு மக்களை பலாத்காரமாக அடக்கி ஆளுவதற்கென்றே விசேஷமான நிர்வனத்தை அமைத்துக்கொள்கிறது. குறிப்பாக சிறைக்கூடம், ஆயுதப் படை, விசேஷ படைகள் ஆகியன இந்நிலையை அடிப்படையாகக்கொண்டு உருவாகுவதே அரசு. (லெனின், அரசு 1919) அடக்கி ஆளப்பாவிக்கப்படும் மேற்கூறிய சாதனங்களைத் தவிர மற்றும் சட்டத்துறை, தனியாருக்கு சொந்தமான உற்பத்தி, உத்தியோகஸ்தர்கள், பிரச்சார சாதனங்கள் ஆதியன சுரண்டும் வர்க்கத்தின் ஆதிக்கம் செலுத்துவதற்காக பாவிக்கப்படும் சாதனங்களாகும். இவை அத்தனையையும் கொண்டு அமைவதே அரசு. இறுதியாக வர்க்கப்பேதத்தை அகற்றிய பின்பே அரசின் பலாத்காரம் பாவிக்கப்படும் தன்மை அகற்றப்படுகிறது. உற்பத்தி முறையாலும் மற்ற நிர்வாகத்தினாலும் சிலரால் ஆக்கப்பட்ட அரசாங்கம் அகற்றப்படுகின்றது. (எங்கல்ஸ், ''குடும்பம் தனியார் சொத்து - அரசு'').

நசுக்கப்பட்ட வர்க்கம் நசுக்கிய வர்க்கத்தின் சாதனமான அரசை பொறுபேற்றுத் தனது வர்க்கத்தேவைக்கேற்ப பாவிக்க இயலாதென்பதை கடந்த



கால சரித்திரம் பல வழிகளில் அச்சுறுத்தியுள்ளது. தனது வர்க்கத்தின் நலன் கருதி அவ்வர்க்கத்திற்கு ஏற்றவாறு நசுக்கிய இனத்தின் அரசை மாற்றியமைக்க வேண்டும். அரசாங்கங்களின் மாற்றத்தால் அடிப்படை சமுதாய மாற்றம் நிகழாது. எனவே அரசின் அடிப்படை அமைப்பு பரிபூரணமாக மாற்றப்படல் வேண்டும். இவ்வுண்மையை ருசியா, சீனா, கியூபா ஆகிய நாடுகளில் நடந்த வெற்றிகரமான புரட்சியும், இந்தோனிசியா, சிலி ஆகிய நாடுகளில் நடந்த அவலமான நிகழ்ச்சிகளும் வலியுறுத்துகின்றன.

அரசபலம் என்பது அரசியலின் கருவூலமாக அமைந்துள்ளது. நாம் சமத்துவ ரீதியான சமுதாயத்தை செப்பனிட வேண்டுமென்றால் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் பொருளாதார சக்தியை முறியடிக்க வேண்டும். சுறுங்கக்கூறின் அரசு பலத்தைப்பெற்று அதைத் தீவிரமாக மாற்ற வேண்டும். கடந்த கால - நிகழ் கால - எதிர் கால எமது அரசியல் போராட்டங்கள் அனைத்தும் இப்பிரச்சினையை மையமாகக்கொண்டு அமைந்ததே. எனவே இலங்கையை எதிர் நோக்கியுள்ள எதிர்காலத்தில் அரசியல் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆகவே இக்காரணத்தை வலியுறுத்த மார்க்ஸிய அரசியலில் மையமாக அமைந்துள்ள அரசு என்ற பெயரை இம்மலருக்குச் சூட்டியுள்ளோம்.

## பிற்போக்குவாதமும் அரச பலமும்

ஐக்கிய முன்னணி அரசாங்கம் சந்தேகமற மற்ற எல்லா அரசாங்கங்களையும் விட முதல்ாளி வர்க்கத்தின் சொத்துரிமை, ஏகபோகம், ஆகியவற்றில் ஊடுருவியுள்ளது. சமத்துவ சொத்துரிமையை வலியுறுத்தும் முகமாக சோல்பேரி அரசியல் அமைப்புத்திட்டத்தைமாற்றி அதற்குப்பதிலாக குடியரசு அரசியற் சட்டத்தை அமுலாக்கியுள்ளது. முதலாளித்துவ பணப்பலத்தைச், செலவு உச்ச வரம்பு, வீட்டு உச்ச வரம்பு, காணி உச்ச வரம்பு, மூலதன வரி போன்ற சட்டங்களின் மூலம் தகர்த்துள்ளது. காணி உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் கிராமப் புறங்களில் காணி விநியோகத்திற்கும், கூட்டுறவு பண்ணைகளை அமைக்கவும், வழி வகுத்துள்ளது. கம்பனிச்சட்டத்தால் ஏகாதிபத்திய வாதிகளுக்கு சொந்தமான சொத்துகளுக்கும் கட்டுப்பாடு விதித்துள்ளது. முதலாளித்துவ பிரச்சார அங்கமாகிய ஏரிக்கரை பத்திரிகைகளைத் தேசியமயமாக்கி தவஸ நிர்வனத்தை மூடியதன் மூலம் முதலாளித்துவ பிரச்சாரத்திற்கு தடை விதித்துள்ளது. அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் பிரேரிக்கப்பட்ட வரி விதிகள் முதலாளி வர்க்கத்திற்கு விரோதமான பெரியதொரு தாக்குதலாகும்.

இத்தகைய மாற்றங்களால் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதன் பொது வேலைத்திட்டங்களில் இருந்து மேலும் உந்தப்பட்டு முன்னேறிச் சென்றுள்ளது. இது முதலாளித்துவ சக்திகளுக்கும் வெள்ளிடை மலையாகும். முதலாளித்துவ சக்திகளது செல்வங்கள், சொத்துக்கள், விசேச வரப்பிரசாதங்கள் அனைத்தையும் ஜனநாயகத்தின் மூலம் இழந்தமையினால் செயலிழந்து அமைதியாகத் தொழிலாளர் வர்க்கத்திற்கு விட்டுக்கொடுத்து விடுவார்கள் என்று நமப முடியாது. பழைய சமுதாய முறை மாற்றப்பட்டு புதிய சமுதாய முறை புகுத்தப்படும்போது பழைய முறையின் பாதுகாவலர்களின் தீவிரமான எதிர்ப்பை எதிர்நோக்கியாக வேண்டும் என்பதற்கு சரித்திரம் சான்று பகரும். சமுதாயத்தின் எந்த ஒரு வர்க்கமும் அஸ்தமித்துக்கொண்டிருக்கும் தம் வர்க்க நலனைப் பாதுகாக்கத் தங்களது அரசியல் பொருளாதார சக்திகளை பிரயோகிக்கத் தவறியதில்லை. சமு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு பெரும் புரட்சியும் இவ்வுண்மைக்குச் சான்று பகர்வதாக அமைந்துள்ளது. முதலாளித்துவ சக்திகள் தங்களின் உடமைகளைப் பாதுகாத்துக்கொள்ளத் தங்களால் ஆக்கப்பட்ட அரசியல் விதிகளைத் தூக்கி எறிந்து விட்டு, ஆயுதப்படையின் அனுசரணையுடன் சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டியுள்ளதைப் பல நாடுகளில் காணக்கூடியதாக இருக்கிறது.

பிற்போக்குவாதம் பல வழிகளில் தலை தூக்கலாம். 1962ம் ஆண்டு காவல் துறையினராலும், ஆயுதப்படையினராலும் சதியின் மூலம் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. 1971ம் ஆண்டு நம்பிக்கை இழந்து - பொறுமையிழந்து - மூர்க்கத்தனமான தெளிவான குறிக்கோள் இன்றி ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் நடாத்திய கிளர்ச்சி வெற்றி பெற்றிருப்பின் வலதுசாரி சர்வாதிகாரத்தில் முடிவுற்றிருக்கும். இடதுசாரி சுலோகங்களை முன்வைத்த பாஸிஸ சக்திகள் அதனால் கவரப்பட்ட மக்களைத் தங்களின் சுயதேவைக்குப் பாவித்த 1920 ம் ஆண்டு காலக்கட்டத்தில் இத்தாலியிலும், 1930ம் ஆண்டு காலக் கட்டத்தில் ஜெர்மனியிலும் அனுபவ ரீதியில் அவதானித்துள்ளோம். 1974ம் ஆண்டு தமது பாரம்பரிய கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியை பிற்போக்கு சக்திகள் பாவித்தது. பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்து நாடெங்கும் குழப்பத்தை விளைவித்து அக்குழப்பத்தை அடக்கும் தோரணையில் கொடியதொரு சர்வதிகார ஆட்சிக்கு வழி கோலியிருக்கலாம். எனினும் மக்கள் மீதும், அவர்களது சமதர்ம போக்கின் மீதும், தாக்குதலை நடாத்த முதலாலித்துவ வர்க்கத்திற்கு எண்ணற்ற வழிகள் உண்டு. வர்க்கப்போராட்டத்தின் அபிவிருத்தி சாதாரண விடையமன்று. கிராமங்களில், ஆலைகளில், பாராளுமன்றத்தின் - அகத்தேயும் புறத்தேயும் எதிர்கட்சிக்கும், அரசாங்கத்திற்கும் இடையே, ஏன் அரசாங்கத்தின் உள்ளேயும் வர்க்கப்போராட்டம் நடைபெறுகின்றது. இந்நாடு இடதுசாரி வலதுசாரி என்று இரு துருவங்களாக பிரிக்கப்படும் நிலையில் உள்ளது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்குள்ளேயும், இவ்வுருவாக்கம் நடைபெற்றுக்கொண்டிருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. முதலாளித்துவ விரோத நடவடிக்கைகள் துரிப்படுத்தப்பட வேண்டுமென மனப்பூர்வமாக வலியுறுத்தும் இடதுசாரிக் குழு ஒரு புறமும், மறு புறம் புதிய தொழில் அதிபர்களினதும், கிராமப்புற முதலாளிகளினதும், கெடுபிடிகளுக்கு ஆளாகி முதலாளித்துவ விரோத நடவடிக்கைகளைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்ற ரீதியில் முதலாளித்துவ விரோத நடவடிக்கைகளை இடைநிறுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து புதியதாக இந்நாட்டிற்கு கடன் பெறலாம் என்ற நம்பிக்கையில் முதலாளித்துவத்தை ஒழிக்கும் நோக்கம் இவ்வரசாங்கத்திற்கு இல்லையென்பதை அவர்களுக்கு வலியுறுத்துவதும், இதன் நோக்கமாகவும் இருக்கலாம்.

இது ஒரு தவறான கணிப்பாகும். ஏகாதிபத்தியவாதிகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு அளிக்கும் கடன் உதவி இரு புறமும் கூரான ஆயுதத்தைப் போன்று இந்நாடுகளைத் தனக்கு அடிமைகளாக வைத்திருக்கும் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டதாகும். ஏகாதிபத்தியம்இன்றைய சூழலில் அதன் சரித்திரம் கண்டிராத பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறது. எனவே வெளிநாட்டு உதவிகளின் பெரும் பகுதி வெட்டப்படலாம் என்று நாம் எதிர்பார்க்கலாம்.



ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அண்மைக்காலத்தில் குழப்பச் சூழ்நிலை நிலவி வருகின்றது. தலைமைப்பீடத்திலுள்ள சிலர் அவசரகாலச் சட்டத்தைப் பாவித்து தொழிற்சங்க, வாலிபர் சங்க ஊர்வலங்களைத் தடை செய்து அரசியல் தொண்டர் படைகளைப் பயிற்றுவிப்பதற்குத் தடை விதித்து தொழிலாள வர்க்கத்திற்கும், இடதுசாரி இயக்கத்திற்கும் வாய்ப் பூட்டுப் போட முயற்சிக்கின்றனர். மக்கள் இயக்கங்களுக்கு எதிராக ஆயுதப்படைகளின் மீது அதிக பட்சம் நம்பிக்கை வைக்கும் நிலைமை உருவாகியுள்ளது. இரகசிய பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்ட தவறான அறிக்கையின் அடிப்படையில் இடதுசாரி இயக்கம் குறிப்பாக சமசமாஜக் கட்சி பாராளுமன்றத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு அரசாங்கத்தினுள் பலம் பெற முயற்சிக்கிறது என்ற கருத்து நிலவுகின்றது. ஐக்கிய முன்னணியின் பங்காளர்கள் உட்பட இடதுசாரி கட்சிகளைக் கட்டுப்படுத்த, அரசு இயந்திரத்தின் மீதும், முக்கியமாகத் பலாத்கார பகுதியில் மட்டுமே நம்பிக்கை வைத்து மக்களை ஒதுக்கிவிட்டு செயலாற்றும் போக்கு நிலவுகின்றது.

இத்தகைய நிகழ்ச்சிகள் சர்வதேச ரீதியில் புதியதல்ல. அமெரிக்காவின் மத்திய உளவு நிறுவனத்தின் ஈடுபாடு இத்தகைய உபாயங்களில் கருவூலமாக இருக்கலாமென்பது கருத்து. 1975ம் ஆண்டு மே மாதம் தாங்கள் நடாத்த திட்டமிட்டுள்ள நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்க ஐக்கிய தேசியக் கட்சி வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளினதும், உள்நாட்டு முதலாளித்துவத்தினதும் ஆதரவோடும், இத்தகைய உபாயங்களை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அதன் நண்பர்கள் மூலமாகவும், ஆயுதப்படை, காவற்துறை, ஆகியவற்றிலுள்ள நண்பர்கள் மூலமாகவும், செயற்படுத்தி வருகின்றது. இந்தோனேசியாவில் முதல் முதலாக கம்யூனிஸ்ட் கட்சியின் மேல் சுகார்னோவை சந்தேகம் கொள்ளச் செய்த வலதுசாரி ஆயுதப்படை உத்தியோகஸ்தர்கள் இறுதியாக கம்யூனிஸ்ட் சதி என்ற போர்வையில் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினரை உயிர்ப்பலியிட்டனர். இதனால் தொழிலாளர் வர்க்கத்தினதும் பொது மக்களினதும்; ஆதரவை அவ்வரசு இழந்தது. இதனால் தனிப்படுத்தப்பட்ட சுகார்னோ வலதுசாரி ஆயுதப்படை உத்தியோகஸ்தர்களின் அடிமையாகி இறுதியில் கைதியானார். முடிவாக 5,00000 கம்யூனிஸ்ட்டுகள் உயிர்ப்பலியிடப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு மூல காரணம் அமெரிக்க மத்திய உளவறியும் நிறுவனமேயாகும். ஐக்கிய முன்னணியைப் பிளவு படுத்த முதலில் ஜ.வே.பெ.யை, அடுத்து இலங்கை சமசமாஜக்கட்சி ஆகியவற்றிக்கு வாய்ப்பூட்டு போட்டு தனிப்படுத்த முயற்சிகள் இலங்கையிலும் நடைபெற்று வருகின்றன. அண்மைக்காலத்தில் உலகில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை உதாரணமாக இவ்வரசாங்கம் பாடமாகக்கொண்டால் வலதுசாரி சக்திகளின் தாக்குதல் எவ்வழியில் நடைபெற்றாலும், அது மார்க்ஸிஸ இடதுசாரிகளை அழிப்பதோடுமட்டும் முடிவுறாது. தக்க நேரத்தில் இந்த முதலாளித்துவ தாக்குதல் முறியடிக்கப்படாவிட்டால் இந்நாட்டின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அதன் தலைமைப்பீடம் உட்பட எல்லா முற்போக்கு சக்திகளுக்கும் சவக்குழி தோண்டப்படுவது உறுதி. இதன் பின் தோன்றும் கொடிய சர்வாதிகார ஆட்சி 1956 ம் ஆண்டு முதல் இது காலவரை எடுக்கப்பட்ட முற்போக்கு திட்டங்கள். காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா அவர்கள் சாதாரண பொது மக்களுக்கு அளித்த நிலைமையும். உயர்ந்த பெருமையும் உட்பட அனைத்தையும் முறியடித்து விடும்.

பிற்போக்கு சக்திகளின் நடவடிக்கைகளை முறியடிக்க ஆயுதப்படைகளை நம்பி இருக்க இயலாது. ஏனெனில் ஆயுதப்படை அதன் அமைப்பு முறை, தலைமை, சரித்திரம் ஆகிய அடிப்படை ரீதியில் அது முதலாளித்துவத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரணாகும். தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையிலான மக்கள் அணியே இந்த அரசாங்கத்தைப்பாதுகாத்து சமதர்ம சமுதாயத்தை நிர்மாணிக்கும் அதன் போராட்டத்தை முன் நடத்தி செல்லக்கூடியதாகும். பல பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் 1974ம் ஆண்டு நிகழ்ச்சிகளின் போது தொழிலாள வர்க்கம் செயலாற்றிய முறை அவர்கள் இந்த அரசாங்கத்தை கவிழ்க்கவும், பாஸிஸ ஆட்சியை நிறுவவும், பிற்போக்குச் சக்திகள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தையும், முறியடிக்க திடசங்கற்பம் பூண்டுள்ளனர் என நிருபித்துள்ளனர், அரசாங்கம் தமது நண்பர்கள் யார்– என்று உணர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வேலைத்தளங்களிலும், தொழிலாளர் பாதுகாப்பு அணிகளை நிறுவும் நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும். அவர்களை, எதிரிகளின் தாக்குதலை முறியடிக்கத் தகுந்த பயிற்சி பெற்ற ஆயுதப்படையின் ஒரு அங்கமாக, இணைக்க வேண்டும்.

## எமது எதிர்கால வழி

ஐக்கிய முன்னணி அரசாங்கம் இந்நாட்டு மக்களோடு ஒன்றிணைந்து ஏகாதிபத்திய - முதலாளித்துவ விரோதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது என்பதை உணர வேண்டும். ஏனைய சமுதாய மாற்றப் போராட்டங்களைப் போல் இப்போராட்டத்திலும் கோழைத்தனத்திற்கும் அதி தீவிர கவனத்திற்கும் இடமில்லை. திடம் - திட சங்கற்பம் - அவை தவிர வேறு வழியில்லை. நாம் திட சங்கற்பம் பூண்டு முதலாளித்துவத்திற்கு எதிராக போராடா விட்டால் ஏகாதிபத்தியத்தின் துணையோடு நமது கடுமாற்றத்தை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு இந்தோனேசியாவில் - சிலி நாட்டில் நடந்ததை போன்று இவ்வரசாங்கத்தை நாசமாக்கி விடுவார்கள். நமது பொருளாதாரத்தில் மூலாதார உற்பத்தி நிர்வனங்களை தேசியமயமாக்க வேண்டுமென்ற கோரிக்கை வெறும் அரசியற் சோஷமல்ல. எமது உற்பத்தியை, உற்பத்தி சாதனத்தை நல்ல முறையில் திட்டமிட்டு இலங்கையை ஒரு சமதர்மபாதையில் இட்டுச் செல்வது அவசியமாகும். விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும், இது அவசியமாகும். எத்தனையோ வகையான விலைக்கட்டுப்பாட்டு முறைகள் அமுலில் இருந்தாலும், ஜவுளி உற்பத்தி, செயற்கை ஜவுளி உற்பத்தி ஆகிய உற்பத்தி நிறுவணங்கள் தேசியமயமாக்கப்படும் வரை விலையைக் கட்டுப்படுத்த இயலாது. அரசாங்கம் காணிச் சீர்திருத்தம் சம்பந்தமாக அடிப்படை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எனினும் இது முதற்படியே. நெற்காணிகளில் இன்னும் நிலவி வரும் சிறு நிலப்பிரபுத்வ நிலையை அகற்றி. உழைப்பவனுக்கே அந்த நிலம் சொந்தமென்ற முறையில் மாற்றியமைத்தால் கிராமிய மக்களின் உழைப்பை, தன்னிறைவு பெற நாட்டின் உணவு உற்பத்தி போராட்டத்திற்கு ஈர்க்கக்கூடியதாக இருக்கும். நமது வெளிநாட்டு வர்த்தகம் இன்னும் மேற்கத்திய நாடுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. நமது இறக்குமதியில் 14 சத விகிதம் மட்டுமே சோஸலிச நாடுகளிடமிருந்து பெறப்படுகின்றது. எஞ்சிய 86 விகிதமும் முதலாளித்துவ நாடுகளிடமிருந்து பெறப்படுகின்றது. உலகப் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாம் தப்பவும், முதலாளித்துவ ஏகாதிபத்திய சுரண்டலிலிருந்து விடுபடவும், சோஸலிச நாடுகளுடன் பொருளாதார ஐக்கியப்படல் வேண்டும். இவ்வாறு செயலாற்ற வேண்டுமெனில் அரசாங்கம் வர்த்தகத்தைப் பொறுப்பேற்க வேண்டும்.



விளங்கக்கூறின் ஏற்றுமதி வர்த்தகம், ஏஜன்ஸி ஹவுஸ், கம்பனிகளுக்குச் சொந்தமான தோட்டங்கள், வர்த்தக வங்கிகள் ஆகியன தேசியமயமாக்கப்பட வேண்டும். கடந்த கால வெற்றியை ஊர்ஜிதப்படுத்த தாமதிக்க வேண்டியதில்லை. சரித்திரம் அவ்வாறு செயல்படுவதில்லை. எமது தலை விதியை நாமே நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஏகாதிபத்தியவாதிகளின் துணையோடு முதலாளித்துவம் எமது மக்களின் சமத்துவ அபிலாசைகளுக்கும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும் சாவு மணி அடித்து விடும். கடந்த கால வரலாறு கண்ட உண்மை இது. அது மட்டுமின்றி நுண்ணிய பொது அறிவும் இதுவேயாகும்.

---

**அதிகாரத்தையும் சொத்தையும் பலவந்தமாகவோ வஞ்சனையாகவோ சிறு பொழுதுக்குப் பிரித்துவிடலாம். ஆனால் என்றுமே இணைப்பை அறுத்துவிடமுடியாது. ஏனென்றால், பிரிவினையின் வேதனை உணரப்பட்டவுடனே சொத்து, அதிகாரத்தை விலைக்கு வாங்கி விடும்; அல்லது அதிகாரம் சொத்தை தனது உடமையாக்கிவிடும்.**

**—பெஞ்சமின் வொட்கின்ஸ் மே.**

**ஒரு கடலையோ, காற்றையோ, ஒளியையோ தனக்கு சொந்தமானது என்று தனியுரிமை கொண்டாடினால் அவனுடைய துணிவைக்கண்டு நீங்கள் சிரிப்பீர்கள். இப்பொழுது நான் உங்களை ஒன்று கேட்கிறேன். நிலத்தை (பூமியை) தனியுடமையாக்கிக் கொள்ளக் கூறும் காரணம், கடலையும் காற்றையும் தனியுடமையாக்கிக் கொள்ளக் கூறும் காரணத்தைப் பார்க்கிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதா?**

**—ரொபர்ட் ப்ளச்பட்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணவீக்கமும் உலக நெருக்கடியும்

***( கலாநிதி என். எம். பெரேரா )**

பணவீக்கமென்றால் என்ன கருத்தூட்டப்படும் என்பதைப்பற்றி தெளிவான கருத்தை அறிந்திருப்பது நன்றாகும். பணவீக்கம் என்ற பதம் சாதாரணமாகப் பொருளொன்றின் விலை அதிகரிப்பினைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும். ஐ. தே. க. சேர்ந்த திரு. பிரேமதாஸ அவர்கள், ஐ. தே. க. காலத்தில் பணவீக்க நிலை நிலவவில்லையா என்று ஒரு கேள்வி கேட்டார். அதன் மூலம், அவர், பணவீக்கம் உலகத்தில் புதியதொரு நிலையல்ல, 1965 - 70 காலப் பகுதியில் தனது கட்சி ஆட்சியிலிருந்த காலத்திலும் பணவீக்கம் நிலவியது. அதனால் இந்த அரசாங்கத்தை தற்போது நோக்கியிருக்கும் கஷ்டங்களுக்கு பணவீக்கத்தை ஒரு சாட்டாகக் காட்ட முடியாது. என்ற கருத்துப்படக் கூறினார்.

பணவீக்கம் என்று குறிப்பிடும் போது ஓர், இரு, பொருட்களின் அல்லது, சில பொருட்களின் விலையேற்றத்தை மட்டுமின்றி வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படும் எல்லாப் பொருட்களினதும் விலைகளின் பொது அதிகரிப் பொன்றினையே குறிப்பிடுகின்றோம்.

பணவீக்கம், அரசாங்கம் கடதாசி நாணயத்தைக் கூடுதலாக அச்சிடுவதன் விளைவாக எழலாம். இந்நிலை பல நாடுகளில் ஏற்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் ஏற்பட்ட பணவீக்கத்துக்கான இரு உதாரணங்களில் ஒன்று, ஜெர்மனியில் 1925 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பணவீக்கமாகும். அந் நாட்டு அரசாங்கம் கடதாசி நாணயங்களை அச்சிட்டுக் கொண்டு போக பொருட்களின் விலைகளும் விண் அளவு உயர்ந்தன. பாண் இருத்தல் ஒன்றுக்குப் பல கோடி 'மாக்ஸ்' நாணயம் செலுத்த வேண்டியிருந்தது. இறைச்சி இறாத்தல் ஒன்றுக்கும் அதே போன்ற நிலை நிலவியது. ஆதலால் மக்கள் பணத்தை சக்கர வண்டிகளில் ஏற்றிச் செல்ல வேண்டியிருந்தது. ஜெர்மன் நாட்டிலேற்பட்ட பாரதூர நிலையப் போலில்லாவிடினும் இது போன்ற நிலை இந்தோனேஷியாவிலும் தோன்றியது. அங்கு, மேலதிகமான கடதாசி நாணயத்தின் காரணத்தினால் இந்தோனேஷியாவின் 'உறுப்பியா' இன் பெறுமதி வலுவாகக் குறைந்தது.

தற்கால உலகத்தில் இருவகைப் பண வீக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. முதலாவது, கேள்வியால் தூண்டப்பட்ட பண வீக்கமாகும். இந்நிலை, கேள்வி பொதுவாக வழங்கலை மிஞ்சுவதால், ஏற்படுவதாகும். பொருட்களின் வழங்கல் பல்வேறு காரணங்களினால் பெரிதும் குறைக்கப்பட்ட அதே வேளையில் வேதன அதிகரிப்பில் குறைப்பு இல்லாது விடின், விலை மட்டங்களில் பொதுவான அதிகரிப்பு நிகழலாம். உலக விளைச்சல் குறைவு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைச் சடுதியாக உயர வழி அமைக்கும். இது, ஏனைய பொருட்களையும் பாதிக்

*நிதி அமைச்சர்



கும். உலகம் மிக அண்மையில் அனுபவித்த அனுபவங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஆசிய ஆபிரிக்க கண்டங்களில் மட்டுமல்லாது ஐரோப்பிய கண்டத்திலும் ஏற்பட்ட பயிர்விளைச்சல் குறைவினால் சகல விவசாயப் பொருட்களினதும், குறிப்பாக, தானிய வகைகளினது விலைகள், இது வரை காணப்படாத அளவுக்கு உயர்ந்தன. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்பினை ஈடு செய்வதன் பொருட்டு தொழிலாளர்களின் உழைக்கும் திறன் உயர்த்தப்பட வேண்டும். மறுபக்கத்தில் வரையறுக்கப்பட்ட அளவு வழங்கல்களையுடைய பயிர்ச் செய்கையாளர்கள் தங்கள் வசமிருக்கும் பொருட்களுக்குக் கூடுதலான விலைகளைக் கோரக்கூடிய நிலையிலிருக்கின்றனர். ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு பணமுடையவர்களாக இருப்பதால் அவற்றின் விலைகளை உயர்த்தக் கூடியவர்களாகவும் பயிர்ச் செய்கையாளர்கள் இருக்கின்றனர். சங்கிலித் தொடராக அமைந்துள்ள விலைகள் மேல் நோக்கிச் செல்லுந்தன்மையே பணவீக்கத்தின் மிகச் சிறப்பான அம்சமாகும்.

பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்ற வகைப் பணவீக்கம், செலவினால் உந்தப்பட்ட பணவீக்கமாகும். இது, பணவீக்கம் முன்னேறிச் செல்லுந் தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. எனினும், அடிப்படையில், இவ் விரு வகைப் பணவீக்கங்களும் ஒரே வகைச் செயலாற்றலையும் எதிர்ச் செயலாற்றலையும் விளைவிக்கின்றன. உயர் வேதனங்கள், மூலப் பொருட்களின் - அவை கமத்தொழில் சார்ந்தனவையாகவும் இருக்கலாம் - உயர் விலைகள் காரணமாக உற்பத்திச் செலவு அதிகரித்தமை, ஆகியவற்றினால் செலவினால் உந்தப்பட்ட பணவீக்கம் ஏற்படலாம். முடிவில் அதே விளைவு, அதாவது எல்லாப் பொருட்களின் பொதுவான விலை உயர்வே ஏற்படும்.

உள்ளபடியான பொருளாதார வாழ்வில் இந்த வேறுபாடுகள் திட்டவட்டமாகவோ வெளிப்படையாகவோ தோன்றுவதில்லை. இத்தகைய வேறுபாடுகள் பகுப்பாராய்ச்சி நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படும். ஆதலால், அவை. சர்வதேசப் பொருளாதார நிலையின் சிக்கலான உண்மைகளை மறைத்தல் கூடாது. பலகோடி டாலர்களை வீண் நாச வேலைகளில் அழித்த வியட்நாம் யுத்தமானது அதனால் உண்டாக்கப்பட்டகேள்வித் தூண்டலை ஈடு செய்வதற்கு வேண்டிய பொருட்களை வழங்கவில்லை. யுத்தத்தின் பொருட்டு போர்க்கருவி ஏற்றுமதி செய்யப்பட்டதனால் அமெரிக்காவில் தொடர்ந்து நிலவிய வியாபார நிலுவை, யுத்தவேகம் குறைந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியதன் பின்னர் தளர்ந்து பின் தேய்ந்து சென்றது. இந்த ஏற்றுமதிகள் மறைந்து, சாதகமாயிருந்த நிலுவை நிலை பெரும் நிலுவைபற்ற நிலையாக மாறியது. அமெரிக்க அதிகாரிகளினால் மேற் கொள்ளப்பட்ட குறுநோக்குடைய விவேகமற்ற பல்வேறு நடவடிக்கைகள் சர்வதேச மூலதனச் சந்தையில் 'யூரோ' டாலர்களின் பெரிய பொது நிதியொன்றை மட்டுமே உருவாக்கியது. மேலதிகமான இந்த டாலர்கள் அவற்றின் மூல இடத்துக்கு மீண்டுஞ் செல்ல மறுத்தன. ஆனால் அவை ஒரு பட்டினத்திலிருந்து இன்னுமொரு பட்டினத்துக்கு மாறி மாறிச் சென்று சர்வதேச ஊகக்காரர்களின் காரிய ஆற்றலினால் உடனடி வட்டியையும் பெற்றன. மேநாட்டுப் பொருளாதார உலகில் நிலவும் குன்றிய நிலைக்கு இந்த 'யூரோ' டாலர்களின் பெரும் பொது நிதியே காரணமாக அமைந்தது. பட்டினத்துக்குப் பட்டினம் மூலதனம் மாறுவதனைத் தடுத்துக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சி ஒவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொன்றும் உலகப் பெரும் பண முதல்வர்களினால் தடுத்து நிறுத்தப் பட்டது.

ஐரோப்பாவில் ஏற்பட்ட இந்த மூலதன மாற்றங்கள் பல ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக, பிரித்தானியா, பிரான்சு, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளில் சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் பலவற்றைத் தோற்றுவித்தன. நாணயமதிப்பிறக்கம் போன்ற சமாளிப்பு ஒழுங்குகள் ஒருவித நிவாரணத்தையும் வழங்கியிருக்கவில்லை. அந்நாட்டுப் பொருளாதாரங்கள் தொடர்ந்தும் அழிவு நிலை யடைகின்றன. மத்திய கிழக்கில் எழுந்த யுத்தம் இந்நிலையை மேலும் மோசமாக்கியது. இதனைத் தொடர்ந்து. சுத்தப்படுத்தாத எண்ணெயின் விலையும் அதிகரித்தது. அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சீனி, மா ஆகியவற்றின் விலை உயர்வோடு பெற்றோலினதும் ஏனைய எரிபொருள் எண்ணெயினதும் உயர் விலையும் உலகப் பணவீக்க நிலையை உருவாக்கியது.

உலகப் பொருளாதார நெருக்கடி முதலாளித்துவ நாடுகளிலுள்ள பெருந்தொகையான ஏழை மக்களுக்கு அளவிலாத கஷ்டத்தையும் துன்பத்தையும் அளித்துள்ளது. ஆனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள ஏழைகளின் நிலை அதைவிட மோசமானதும் அவர்களின் துன்பம் விளக்கமுடியாததுமாகும். குறைவான விளைச்சல், பணவீக்கம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த விளைவுகள் பூமத்திய ரேகையை அண்மித்துள்ள பல ஆபிரிக்க நாடுகளில் அவலமான விளைவுகளை உண்டாக்கியன. சனத்தொகையின் பெரும்பகுதி அழிக்கப்பட்டுள்ளது. இந்தியா, வங்களா தேசம் ஆகிய நாடுகளில் வறுமையினால் உயிரிழந்தவர்களின் தொகை புறக்கணிக்கத்தக்கனவல்ல. இலங்கையிலுள்ள நாமோ ஓரளவு பாக்கியம் பெற்றவர்களாக உள்ளோம். கால நேரத்தோடு ஆரம்பிக்கப்பட்ட உணவுப் பயிர் உற்பத்தியின் மூலம் இந்தப் பொருளாதாரப் புயலை நாம் ஓரளவு சமாளித்து எதிர் நோக்கியுள்ளோம். வறுமையினால் பலர் துன்புற்றார்கள் என்பதில் ஐயமில்லை. மக்களின் எதிர்ச்சூழ்ச்சியில் விரைவான குறைவுபாடு அவதானிக்கக் கூடியதாக இருப்பினும் பசியினால் மக்கள் இறப்பது தடுக்கப்பட்டுள்ளது. பொதுவுடமையைப் பின்பற்றும் பல நாடுகளும் பணவீக்கத்தோடு தொடர்புடைய கொடிய இன்னல்களிலிருந்து தப்பித்துள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும் அவர்கள், இந்த இன்னல்களிலிருந்து முற்றிலும் விடுபட்டிருக்கவில்லை. விலை மாற்றங்களின் விளைவுகளை அவர்களும் உணரத்தான் செய்தனர். ஆனால் அவர்களது பொருளாதாரம் ஒழுங்கு படுத்தப்பட்டதாகவும், உற்பத்தி வழி முறை, திட்ட மிடப்பட்ட ஒழுங்கமைப்பை நோக்கி இருந்ததன் காரணத்தினாலும் அவர்கள் வியாபார, சென்மதி சமநிலைகளில் சிறு மாற்றங்களோடு தப்பக்கூடியதாக இருந்தது. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்துக்குப் பாரதூரமான ஊறுபாடு ஏற்படாமலிருக்கச் சமவுடமையை மேற் கொண்ட சமுதாய அமைப்பின் திறமையில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு இது ஒரு நல்ல படிப்பினையாகும். பல நாடுகளின் பொருளாதாரங்களில் ஏற்பட்ட இந்த மாற்றங்களைத் தனித்தோ, ஒன்று கூட்டியோ ஆராயும் போது அத்தகைய மாற்றங்கள் சுய இலாபம் பெறும் சுயநலமான நோக்கினால் ஏற்பட்டன என்பது தெளிவாகும்.

இந்த உலகப் பொருளாதார நெருக்கடி உலகத்தின் பொருளியல் அறிஞர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. இவர்களுள் மிகப் பரிதாபகரமான இடத்துக்குரியவர் அமெரிக்க ஜனாதிபதி திரு போட் ஆகும். தனது பொருளியல் அறிஞர்களுள் 32 நபர்களை ஆலோசனைக்கு அழைத்தார். அதன் மூலம் இந்தப் பிரச்சனைக்கு விரைவான தீர்வுகாண அமெரிக்கா முயன்றுள்ளது. என்ற அபிப்பிராயத்தை உண்டு பண்ணினார். விரைவான தீர்ப்பல்ல. அவருக்கு ஒரு தீர்ப்புமே வழங்கப் படவில்லை. அதிகரித்துவரும் பணவீக்க நிலையில் பொருளாதார மந்தம் அல்லது பின்னிடைவு பயமுறுத்திக் கொண்டிருக்கையில் அவருக்கு வழங்கப்பட்ட சிறந்த ஆலோசனை பணவீக்கத்தை தடுப்பதற்கு ஒரு காலப் பகுதிக்கு பின்னடைவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதேயாகும். இது திட்டவட்டமாக முதலாளித்துவ முறையின் தீர்ப்பாகும். முதலாளித்துவ முறையை ஆதரிக்கும் பொருளியல் அறிஞர்கள் சகடவோட்ட வளர்ச்சித் தத்துவத்தை ஒரு போதும் கைவிடவில்லை. இந்தத் தத்துவம் பெருந்தொகையினருக்கு வேலையின்மை, மக்களின் வாழ்க்கைத்தரத்தைக் குறைத்தல், முதலாளித்துவ வர்க்கத்தினர் குறைவுபடாத வாழ்க்கைச் சுகபோகங்களை அனுபவிக்க மக்களுக்கு வறுமையையும் சந்தலையும் அளித்தல், ஆகிய விளைவுகளை விளைவிக்கும். இத்தத்துவமானது கட்டில்லாப் போட்டியையும் தன்னிச்சைக் கொள்கையையும் நிலவிய 19 ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகும். ஆனால் தற்போது திட்டமிடப்பட்ட பொருளாதாரம். அன்னியச் செலாவணி உட்பட பல வகைக் கட்டுப்பாடுகள் ஆகியன அமுலில் உள்ளன. (19) நூற்றாண்டு உலகுக்குப் பொருத்தமான தத்துவங்களும் தீர்வுகளும் வேறுபட்ட சூழ் நிலை நிலவும் 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குப் பொருந்தாதென்பதுவெளிப்படை.

ஐந்நூறு பேர் செய்யும் வேலையைச் செய்யும் ஓர் இயந்திரத்தை ஒருவன் சொந்தமாக வைத்திருக்கிறான். இதன் விளைவாக ஐந்நூறு பேரும் வேலையிழந்து, பட்டினியால் வாடி, களவு செய்யத் துணிகிறார்கள். அந்த ஒருவன் இயந்திரத்தின் எல்லா உற்பத்தியையும் தானே பெற்று, தான் வைத்திருக்க வேண்டியதிலும் பார்க்க ஐந்நூறு மடங்கு அதிகமாக வைத்திருக்கிறான் அதாவது, தன் உண்மையான தேவையை விட அதிகமாக பெறுகிறான். அந்த இயந்திரம் அனைவருக்கும் உரிய சொத்தாக இருந்தால் ஒவ்வொருவரும் அதனால் பயன் பெறுவார்.

—ஒஸ்கர் வைல்ட் (சோஷலிஸத்தில் மனிதனின் ஆத்மா)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தன்மை

## *(அனில் முனசிங்க)

இலங்கையின் அரசு, அதன் சாதனைகள்; விவகாரம், விருத்தி ஆகியவை பற்றிய அறிவு இன்றைய அரசியல் சூழ் நிலையில் அவசியமானதாகும். இங்கு தொழிலாளர் வர்க்கத்தினதும் விவசாயிகளினதும் பிரதிநிதிகள், ஜனநாயக ரீதியில் சட்ட சபை ஆதிக்கத்தைக் கைப்பற்றி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மூலம் வர்க்க நலனைக் கருதி முதலாளித்துவ சக்திகளின் பணபலத்தைச் சிதறடித்துள்ளனர். முதலாளித்துவ சொத்துரிமை, ஆஸ்தி சம்பந்தம் ஆகியவற்றில் ஊடுருவல் நடாத்தப்பட்டுள்ளன. இவ்வேலைத்திட்டம் தொடரப்படுமாயின், இலங்கையில் முதலாளித்துவத்தின் நீட்சி, அதன் பணபலம் ஆகியன நசுக்கப்படும். சட்டவாக்க சபையில் மட்டுமின்றி சமுதாயத்தில், பொருளாதார உறவு முறையில், மக்களின் சிந்தனை சக்தியைக் கட்டுப்படுத்தும் சித்தாந்தங்களை உருவாக்குவதில், நிதி நிர்வாகத்துறையில், சட்டத்துறையில் மற்றும் அரசின் உள் அங்கமாகிய நிர்வாகத்துறை ஆகியவற்றிலும், தனது செல்வாக்கை இன்னும் பலப்படுத்திவருகின்றது.

அரசியல் மாற்றங்களைப் பொருட்படுத்தாது செயலாற்றிவரும் சக்திகளில் ஆயுதப்படை, காவற்துறையினர், நிரந்தர உத்தியோகத்துறையினர், ஆகியவை வெளிப்படையான பலம் பொருந்திய சக்திகளாகும். இத்துறைகளில் முதலாளித்துவ பலம் முதன்மை வாய்ந்ததாக தோன்றுகின்றது. உதாரணமாக, ஆயுதப் படை, கண்ணாடியைப் போன்று முதலாளித்துவ அரசின் பாரம்பரிய உள்ளாக்கத்தையும், சித்தாந்தத்தையும், ஏனைய குணாதிசயங்களையும் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆதரவாளர்களால் வழி நடாத்தப்பட்ட புதிய அரசியல், சமூக சக்திகளின் சித்தாந்த ரீதியில் ஆயுதப்படையை தயார் படுத்தும் நடவடிக்கைகள் இதுவரை எடுத்துக்கொள்ளப்படவில்லை, நெதர்லாந்து நாட்டின் ஆயுதப்படையில், சாமானிய சிப்பாயிகளுக்கு. தங்களின் தொழில் அடிப்படையில் சங்கங்கள் அமைக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வுரிமை நமது சிப்பாயிகளுக்கு வழங்கப்படாதது மட்டுமின்றி பிரித்தானிய ஆயுதப்படைகளைப் போன்று நமது ஆயுதப்படைகளும் செப்பனிடப்பட்டுள்ளன.

ஆலோசனைகள் வழங்கும் துறையிலும், பிறிதொரு உதாரணத்தைக் காட்டலாம். கல்வித்துறை, பிரச்சாரப்பகுதி ஆகியவற்றில் முதலாளித்துவ ஆலோசனைகளே மேன்பட்டு விளங்குகின்றது. இலங்கை புதியதொரு சமூக அமைப்பை அடைய வேண்டுமாயின், அரசின் உள்ளும் அம்மாற்றங்கள் பிரதிபலிக்க வேண்டும். இல்லையெனில் முதலாளித்துவ அரசை நாம் தொடர்ந்து வைத்திருப்பதுடன் தொழிலாளர் விவசாய வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சக்திகளின் மூலம் தற்காலிகமாக அரசின் சக்தியில் ஒரு சில ஊடுருவல்களை மாத்திரம் செய்தவர்களாவோம்.

---

*சமசமாஜக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர்



சிலி நாட்டில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் காரணமாக அண்மைக் காலத்தில் அரசு சம்பந்தப்பட்ட மார்க்சிச சித்தாந்தம் தீரத்தன்மை அடைந்துள்ளது. அந்நாட்டின் நிர்வாக சட்ட வாக்கப் பலத்தை சோஷலிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரிக் கட்சிகள் கைப்பற்றின. ஆனாலும் ஆயுதப்படை, அரசின் உயர் உத்தியோகத்தர்கள் ஆகிய சக்திகளை அகற்றாது மிகத் தீவிரமாக சமுதாய மாற்றங்களை ஏற்படுத்த இவ்வாட்சி முயன்றபோது, அரசின் உள்ளங்கமாகிய உத்தியோகத்தர்கள் தங்களுடைய சக்தியை மிகைப்படுத்திக் கொண்டு தொழிலாளர் விவசாய வர்க்கத்தினால் சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை அழித்து விட்டனர்.

இலங்கையிலும் அரசின் அமைப்பில் ஊடுருவல் நடாத்தப்பட்டு நாட்டின் சமுதாய பொருளாதார மாற்றங்கள் செய்யப்படும் தறுவாயில் அரசும், அத்தகைய மாற்றங்களைச் செயற்படுத்தும் ஆயுதமாக மாற்றப்படல் வேண்டும். அத்தகைய மாற்றங்களைச் செய்யத் தவறினால் தொழிலாளர் விவசாய வர்க்கத்தின் பிரதிநிதிகள் இன்று அனுபவித்து வரும் சட்ட வர்க்க நிர்வாக பலத்திற்கும் பங்கம் விளையலாம். எனவே அரசின் தன்மை அதன் சுபாவம் ஆகியவற்றை ஆராய்வது அத்தியாவசியமாவதுடன், அதன் மூலம் அது செயலாற்றும் விதத்தையும் புதிய பொருளாதார சமுதாய மாற்றத்திற்கேற்ப ஏற்பட வேண்டி மாற்றங்களையும் நாம் புரிந்து கொள்வது அவசியமாகும். அரசு என்ற அமைப்பு சமுதாயத்தின் வர்க்கங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகியதாகும். வர்க்கங்கள் நிலவும் சமுதாயத்திற்கு முன்பு நிர்வாக கண்காணிப்புக்கான அமைப்பு இனத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் அமையவில்லை. வர்க்க போதத்தை அணிப்படுத்த வேண்டிய அரசு என்ற சாதனம் ஏற்பட்டது. பொருளாதார ரீதியில் அரசு அத்தியாவசியமாகும். ஒவ்வொருவருக்கும் பொருளாதார ரீதியில் நிர்வாகம் கண்காணிப்பு சட்ட திட்டங்கள் இயற்றல் ஆகியன - குறிப்பாக ஆளும் கட்சியின் வர்க்க நலன் கருதி—அவசியமாகும் அரசு என்பது சமுதாயத்திற்கு மேலானது அல்ல. மாறாக அரசின் அமைப்பை உருவாக்குவது சமுதாயமாகும். அரசு தனிப்பட்ட ஆட்சியை அமைப்பதற்கு முன்பு அரசின் சட்ட வர்க்க முறைகள் சமுதாயத்தில் கூட்டுறவு அடிப்படையில் நடை பெற்று வந்தன. நாகரீக முன்னேற்றத்தின் பின் சமுதாயத்தில் தொழில் வர்க்க ரீதியில் பிரிவு பட்டதும் இந்த சூழ் நிலை சாத்தியமாகவில்லை. ஆதி மனித சமுதாயத்தில் சட்ட முறையென்ன? மக்களுக்கு மத்தியில் ஏற்படும் தகராறுகள் பஞ்சாயத்து முறையில் இணக்கம் காணப்பட்டன. சன சமூகத்தாலும் ஆயுதபாணிகளாலும் நீதியை நிலை நாட்டும் வேலைகள் கூட்டாக நடைபெற்று வந்தன. ஆனால் சமுதாயத்தில் பல வர்க்கங்கள் பெருகியதால் இத்தகைய கூட்டு நடவடிக்கைகள் சாத்தியமாகவில்லை. இதற்காக விசேச குழுக்கள் உருவாகியது. எனவே ஆயுதம் தாங்கி நீதி நிர்வாகம் செய்யும் உரிமை ஒரு சிலருக்கு உரித்தாகியது. இறுதியாக அரசுபலம் ஆயுத பிரயோகத்தால் பெறப்பட்டு நடாத்தப்பட்டது. இந்நிலையை அடிப்படையாகக் கொண்டு எங்கல்ஸ், அரசு என்பது ஆயுதம் தரித்தவர்களின் ஒரு குழாம் என்று கூறியுள்ளார்.

அடிமை - பிரபுத்துவ அல்லது முதலாளித்துவ சமுதாய அரசாக இருப்பினும் அரசாங்கம் ஜனநாயகம் முதல் சர்வாதிகாரம் வரையிலான மாறுபட்ட சொரூபங்களை எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் அதிகாரம், குறிப்பாக நவீனகால அரசின் அதிகாரம் நிரந்தரமானதும் பல பகுதிகளைக் கொண்டதுமாகும். இவ்வதிகாரம் பல்வேறு நிறுவனங்கள் மூலம் பிரயோகிக்கப்படுகின்றது. இந்நிறுவனங்கள், ஏற்கனவே, கூறியதுபோல், பாராளுமன்ற ஆட்சிமுறையின் கீழான மாற்றங்களினால் பாதிக்கப்படுவதில்லை. இதில் தலையாயது ஆட்சி நிருவாகமாகும். அரசு பணித்துறை, பொலிஸ், ஆயுதப்படைகள், நீதித்துறை, அத்துடன் கல்வி, மற்றும் பல்வேறு நிறுவனங்களின் ஊடாக சமுதாயத்தின் சிந்தனைப் போக்கினை உருவாக்கும் துறைகள் ஆகியன இந்த ஆட்சி நிருவாகத்தில் அடங்குகின்றன. தேர்தல்கள் மூலம் அரசாங்கங்கள் மாற்றமடைந்தாலும் மேலே குறிப்பிட்ட நிறுவனங்கள் மாறுவதில்லை. தீவிர அரசியல் போக்குடைய கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும் இந்நிறுவனங்கள் மாற்றமின்றி தாக்குப்பிடித்து விடுகின்றன. இவை, ஆட்சி நடத்தும் வர்க்கத்தைப் பிரதிபலிப்பதுடன் அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தவும் செய்கின்றன. இந்நிறுவனங்கள் மூலம் சமுதாயத்தில் மேல்மட்டத்தில் உள்ள வர்க்கத்தினரின் நீடித்த ஆட்சியும் நிலைநாட்டப் படுகின்றது. ஆகவே ஒவ்வொரு அரசும், அதன் வர்க்க அடிப்படையினால் உற்பத்தி முறை, உற்பத்தி உறவு, சொத்துடைமை ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு காரணமாக அரசின் பண்பு நலன்கள் உட்பட அரசு அதிகாரம் முழுவதுமே மாற்றியமைக்கப்படுவது மிக அவசியமாகும்.

இவற்றிலிருந்து அரசு வேறு, அரசாங்கம் வேறு என்று தெளிவாகிறதல்லவா? அரசாங்கம் என்பது தற்காலிகமாகக் கிடைக்கும் ஆட்சி நிருவாகமும் சட்டமன்ற அதிகாரமுமேயாகும். தற்காலிகமாகக் கிடைக்கும் இவ்வதிகாரத்தைக் கொண்டு அரசு அதிகார அமைப்பை முற்றாக மாற்றிவிடாமல், அதே சமயம் தீவிரமான சமுதாய, பொருளாதார மாற்றங்களைச் செய்ய வேண்டுமே அல்லாது வெறுமனே பாராளுமன்ற ஆசனங்களில் அமர்ந்துவிட்டு வருவதில் எவ்வித பயனுமில்லை. இப்படியான கட்டத்திலேயே அரசு பணித்துறை, ஆயுதப்படைகள், நீதித்துறை உட்பட மற்றைய எல்லா அரசு நிறுவனங்களும், அவற்றுடன் பல்வேறு சமூக, பொருளாதார சக்திகளும் சேர்ந்து கொண்டு ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் சட்டமன்ற, நிருவாக அதிகாரத்திற்கு சாவுமணியடிப்பதற்காகக் கொதித்தெழும்புகின்றன. ஆயினும், ஆளும் வர்க்கத்தின் பல்வேறு பிரிவுகளும் தத்தமது சொந்தகொள்கைகளை நிறைவேற்றுவதற்காக தமக்குள் போராடும் போது அரசின் நிலை தெளிவற்றதாயிருக்கும். இத்தகைய சந்தர்ப்பத்தில் ஒன்றிணைந்த சில விளைவுகள் உண்டாகும். உதாரணத்திற்கு, அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுள்ளனவான ஆளும் வர்க்கத்துக்குள்ளும் அரசுக்குள்ளும் உள்ள சக்திகளின் நடுவர் போல் தோற்றமளிக்கும் அரசாங்க நிருவாகத்துறையானது கூடுதலான சுயாதீனத்தைப்பெறும். இவ்விடத்தில் அதிகாரப் போட்டியானது பாராளுமன்ற அரங்கத்திலிருந்து வெளிப்பட்டு, முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாதார பலம் செறிந்துள்ள நிலைகளான முதலாளித்துவ சமுதாயத்திற்குள்ளும் முதலாளித்துவ அரசுக்குள்ளும் விரிந்து பரவும். இதன் எதிரொலியை வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் காணலாம். இவை மூலமாகவே நெருக்குதல் பிரயோகிக்கப்படுகின்றன. இந்நிலையைத் தற்கால ஜப்பானில் காணலாம். அங்கு லிபரல் கட்சியின் தலைவரை அக்கட்சியின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதில்லை. பெரிய தொழில் நிறுவனங்களும் வர்த்தக தாபனங்களுமே லிபரல் கட்சியின் தலைவர் தெரிவைத் தீர்மானிக்கின்றன.



சில சமயத்தில் ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான அதிகாரப் போட்டி மிகவும் உச்சகட்டத்தை அடைந்துவிடும். அவ்வர்க்கங்கள் தமக்கிடையில் சமமான பலத்துடன் முட்டி மோதிக்கொள்ளும். இந்நிலையிலேயே, இவ்விருவர்க்கங்களையும் சமரசப்படுத்தும் வகையில் நடுவர் ஒருவர் தலைதூக்குவதுண்டு. இத்தகைய நடுவர், அச்சூழ்நிலையில் பலம் வாய்ந்தவராகவும் மதிக்கப்படுகிறவராகவும் தோற்ற மளிப்பார். அவரது செயல்களும் ஆளும் வர்க்கத்திற்கு எதிரானவை போலவே தோற்றமளிக்கும். ஆனால் உண்மையைச் சொல்லப் போனால், சமுதாயம் இதனால் உருப்படியான மாற்றமோ பலனோ அடைவதில்லை. உற்பத்தி உறவுகளும் நடைமுறையிலுள்ள சமுதாயத்தின் பொருளாதார அடிப்படையும் மாற்றப்படாத வரையில், வெறும் தலைமைப்பீட மாற்றங்களால் எவ்வித பயனுமில்லை. வரலாறு இத்தகைய பல சம்பவங்களைக் கண்டுள்ளது. ஜூலியஸ் சீஸர், முதலாம் நெப்போலியன், லுயிஸ் நெப்போலியன் ஆகியோர் இப்படியாக உருவாகிய தலைவர்களேயாவர்.

இவ்வாறான காலகட்டத்தே, அதாவது ஆளும் வர்க்கங்கள் தமக்கிடையேயும் அல்லது ஆளும் வர்க்கத்தினரும் வறிய வர்க்கத்தினரும் அவைகளுக்கிடையேயும் முட்டி மோதிக்கொள்ளும்போது நிறைவேற்றப்படும் சட்டங்கள், இருதரப்பினரில் யாராவது ஒரு தரப்பினருக்குச் சாதகமாக இருந்து விடுவதுண்டு. இப்படியான காலகட்டத்தேதான், ஒரு வர்க்கத்தை நசுக்குவதற்கான இன்னொரு வர்க்கத்தின் அரசியல் அதிகாரக் கருவியாக விளங்கும் அரசு, மாற்றமொன்றிச்கு உள்ளாகிறது. எல்லாவர்க்கங்களுக்கும் அப்பாற்பட்ட சுயாதீன நிலையொன்றினை அரசு அடையும், சமுதாயத்தின் தலையாய சக்தியாக விளங்கும். ஆயினும் இவ்விடத்தில் மார்க்ஸ்,

> "....எனினும் அரசு அதிகாரம் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருப்பதில்லை. போனபார்ட் ஒரு வர்க்கத்தைப் பிரதிபலிக்கிறார். அந்த வர்க்கம், பிரெஞ்சு சமுதாயத்திலேயே பெரும்பான்மையாக உள்ள சிறு உடமை விவசாயிகளாவர்."

இதன்படி போனபார்ட் ஒருவர், நடைமுறையிலுள்ள சமூக, பொருளாதார அமைப்புகளில் சில மாற்றங்களைச் செய்தபோதிலும், அரசு அமைப்புகளை மேலும் வலுப்படுத்துவதாகவே இம்மாற்றங்கள் இருந்து விடுகின்றன.

இந்த நிலைமையை எங்கல்ஸ் பின்வருமாறு விளக்குகிறார்:

> "அபூர்வமான சில சந்தர்ப்பங்கள் தவிர, எவ்வாறாயினும், மோதிக் கொள்ளும் வர்க்கங்கிடையிலான சமபல நிலையில், நடுவராசத் தலைதூக்கும் அரசு, அச்சமயத்துக்கு ஓரளவான சுயாதீன நிலைமையை தற்காலிகமாக அடைகிறது."

ஆகவே, போனபார்ட்டிஸத்தினால் தொழிலாளர் வர்க்கத்தினர் சுதந்திரம் பெற்றாலும் சமூக, பொருளாதார ரீதியாக பழைய அமைப்புக்குள்ளேயே அவர்கள் தொடர்ந்து கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

இவ்விடயத்தில் மார்க்ஸீய கண்ணோட்டம் மிகத் தெளிவானதாகும். பழைய அரசு நிருவாக யந்திரத்தை தொழிலாள வர்க்கம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். ஆனால் அதே நிருவாக யந்திரத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தாமல் புதிய நிருவாக அமைப்பை உருவாக்க வேண்டும். வேறு சமூக வர்க்கங்களுக்கு மேலாக தொழிலாளர் வர்க்கம் அடைந்துவிட்ட மேலாதிக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் புதிய நிருவாக யந்திரம் விளங்க வேண்டும்.

ஆனால் முந்திய புரட்சிகளிலும் முந்திய சமூக அமைப்புகளிலும் போலல்லாது, மேலாதிக்கம் பெற்றுவிட்ட தொழிலாளர் வர்க்கம், முதலாளித்துவ சொத்து உரிமைகளையும் முதலாளித்துவ சொத்து உறவுகளையும் உடைத்தெறியவும் தனியொருவர்க்கத்தை உருவாக்கவும் தனது அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும். இந்த ஒரு வர்க்கமென்பது உற்பத்தியோடு உறவுகொண்ட வர்க்கமாகவே இருக்கும். இதுவும் கால கட்டத்தில் மறைந்துபோய் வர்க்கமற்ற ஒரு சமுதாயமாகிவிடும். இந்த வர்க்கமற்ற சமுதாயமே முதலாளியாகவும் தொழிலாளியாகவும் விளங்கும் இதனால் முதலாளித்துவத்தின் சமூக, பொருளாதார முரண்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளிவைக்கப்படும். இதிலும், தொழிலாளர் அரசு என்பது கூட ஒரு இடைக்கால நிகழ்வாகவே இருக்கும். அதுவும் படிப்படியாக மாறி பரிபூரணமான சமதர்ம. சமுதாய அரசு எற்படும். மக்கள் முழுப்பேரும் ஒருமுகப்பட்டு இயங்கினால்தான் இந்நிலையை அடைய முடியும். இம்முயற்சியில் நிரந்தர ராணுவப் படைகள் அகற்றப்படும் ஆயுதந்தாங்கிய மக்கள் ராணுவப் பணிக்கு பொறுப்பாக இருப்பர். அரசாங்க நிருவாகத்தை உயர்ந்த பதவியிலுள்ளவர் முதல் . தாழ்ந்த பதவியிலுள்ளவர் வரை எல்லாரும் நடத்துவார்கள.

டிராஸ்கியின் வார்த்தைகளில் -

> ''அரசு ஆரம்பத்திலிருந்தே இரட்டை குணாதிசயங்களை நேரிடையாகப் பெற்றது. உற்பத்திக் கருவிகளல் சமூக உரிமையைப் பாதுகாத்த தினால் சோஷலிஸ உருக்கொண்டது. அதேசமயம் பொருட்களின் விநியோகத்தில் முதலாளித்துவ பாணியிலான வழிகளைப் பின்பற்றிய தால் பூர்சுவா வேடம் பூண்டது.''

அத்துடன், லெனின் தாம் உருவாக்கிய தொழிலாள வர்க்க அரசு பற்றி முறையாகவும் பூரணமாகவும் ஆராய்வதற்கு முன்பே அவர் எவ்வாறு மரணமடைந்தார் என்பதையும் டிராட்ஸ்கி விளக்கியுள்ளார். லெனின் தாம் உருவாக்கிய அரசு, ''பூர்சுவா இல்லாத ஒரு பூர்சுவா அரசு'' என்று வருணித்துள்ளபோதிலும், டிராட்ஸ்கியினால் வர்ணிக்கப்பட்டவாறு இந்த இரட்டைக் குணாதிசயம் புதிய அரசின் அமைப்பை பாதிக்கவே செய்தது. இந்நிலையில் ஸ்டாலினுடைய போனபார்ட்டிசமே சோவியத் அரசு தனக்கென தனியொரு சுயாதீனத்தை அடைவதற்கு உதவியது. இச்சுயாதீனம் புதிய நிருவாகத்துறையொன்று வேரூன்றவழிவகுத்தது. இந்த நிருவாகத் துறை தனக்கென பல்வேறு சிறப்புரிமைகளைக் குவித்துக்கொண்டது. எந்த சமூக அமைப்பு மூலமாக, எந்த சமூக அமைப்புக்காக இப்புதிய நிரு வாகத்துறை நிறுவப்பட்டதோ அது அந்த இலட்சியங்களுக்கு மாறாக தனது அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டது. அரசு என்பதில் நிரு வாகத்துறையின் ஆதிக்க நலம் மேம்பட்டு நிற்கிறது என்பதற்கு ஒரு நல்ல உதாரணத்தையும் காட்ட முடியும்.

முதலாளித்துவ சமுதாய அமைப்பிலிருந்து விடுபட்டுவிட்ட சோவியத் யூனியனும் மக்கள் சீனக் குடியரசும் ஒரேவிதமான சித்தாந்தை



யும் ஒரேவிதமான வர்க்க அடிப்படையையும் கொண்டுள்ள போதிலும் அவ்விரண்டு நாடுகளின் ராணுவங்களும் எல்லையின் இருபுறமும் எதிரும் புதிருமாக நிற்பது, அவற்றின் நிருவாகத்துறைகளை தெளிவாகப் பிரதி பலிக்கின்றன.

இக்கட்டத்தில், எம்மைப் பொறுத்தளவில் அவசரகாலச் சட்டமொன்றுக்குள் நாம் இருக்கிறோம். முதலாளித்துவ முறைகள் இன்னும் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில் நமது நாட்டின் அரசு யந்திரத்தை ஆராய்வது மிக முக்கியமாகும். இங்கு நமது சமுதாயமும் கொதிகலனில் உள்ள நிலைமையிலேயே உள்ளது. விவசாயிகள் தொழிலாளர்களின் பிரதிநிதிகளானகட்சிகள் தம் கைகளில் உள்ள அரசியல், சட்டத்துறை அதிகாரங்களைப் பயன்படுத்தி வருவதே இதற்குக் காரணமாகும். இதனால் நிருவாகத் துறையினரும் மற்றைய முதலாளித்துவ அமைப்புகளும் ஆத்திரமடைந்துள்ளன. தங்களது அதிகார செருக்குக்கு ஆபத்துவந்துவிட்டதாக அஞ்சுகின்றன.

---

ஒவ்வொரு தனி நபரின் தலைவிதி முற்றாக சமுதாயத்தின் தலைவிதியுடன் கட்டுண்டு இருப்பதால், ஜனநாயகம் என்பது தனி நபரின் சுதந்திரங்களை மாத்திரம் மலர்ச்சியுற செய்வதன்று. அதன் பொருள் மக்களுடன் பொறுப்புகளைக் கூட்டாகத் தெரிவிப்பது என்பதே.

—திரிப்போலித் திட்டம், அல்ஜீரியா, 1962

உலக மக்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் உயிர்வாழ்வதே கஷ்டமாக இருக்கும் வரை, உலகம் பரஸ்பரம் இணங்கிவர இயலாது.

—ஊதான்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கு ஆசியாவில்

# "தேசிய சமுதாயத்தை" நிர்மாணிக்கும் பிரச்சினை


## (ஹெக்டர் அபயவர்தன)*


தெற்கு ஆசிய நாடுகளில் "தேசிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது" பற்றி நாம் குறிப்பிடும்போது, இந்த நாடுகளில் இன்னும் "தேசிய சமுதாயங்கள்" தோன்றவில்லையென்றோ, குறைந்தபட்சம், "தேசிய சமுதாயங்களாக" வளர்ந்துவரும் அவற்றின் வளர்ச்சி இன்னும் பூர்த்தியாகவில்லையென்றோ நாம் கருதுகின்றோம். ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பால் இந்த நாடுகளின் வரலாறு "தடைப்பட்டதென்பது" சிலரின் வாதம். அவை குடியேற்ற நாடுகளாக மாறும் வரை, அந்நாடுகளிற் சில, "தேசிய சமுதாயங்களைக்" கொண்டிருந்தன என்று அவர்கள் வாதிக்கின்றனர். அவர்களின் கூற்றின்படி, தென் ஆசிய நாடுகளில் "தேசிய சமுதாயங்களைக் கட்டியெழுப்புவதற்கு" அன்னிய அடிமைத் தளையினின்று விடுதலைபெறுதல் இன்றியமையாததாகும். இவ்விடுதலை முழுமையாகவோ, அரைகுறையாகவோ இடைத்திருப்பதால், இந்த நாடுகள் இப்பொழுது "தேசிய சமுதாயங்களாக" விளங்குகின்றன. இத் தேசிய சமுதாயங்களின் வாழ்வுக்கு எஞ்சியுள்ள காலனி முறை இடையூறு விளைவித்தாலும்-அவற்றின் விவகாரங்களில் முன்னுள் காலனிவாதிகளும், புதிய ஏகாதிபத்திய வல்லரசுகளும் தொடர்ந்து தலையிட்டுக் கொண்டிருந்தாலும், இந்த இடர்ப்பாடுகள் மத்தியில் இந்நாடுகள் இன்று "தேசிய சமுதாயங்களாக" வாழ்கின்றன.

அதற்கான காரணங்கள் தெளிவாக இருக்கவில்லையெனினும், இந்திய உபகண்டம் ஒரு புவி இயல் சார்ந்த தனி ஒருமையாகவே பொதுவாகக் கருதப்பட்டு வந்துள்ளது. மேற்கே சிந்து நதி சமவெளியையும், கிழக்கே கங்கை, பிரம்மபுத்திரா நதி சமவெளியையும், வடமேற்கே இந்துகுஷ், காரகோரம் மலைத் தொடரையும், வடக்கே உயர்ந்தோங்கி நிற்கும் இமயத்தையும் எல்லைகளாகக் கொண்ட தற்போதைய பாகிஸ்தான், நேபாளம், சிக்கிம், பூட்டான், வங்காள தேசம், இந்திய யூனியன் ஆகியவை ஒரு பொதுத் தனித்துவமாக விளங்குவதைத் தேசபடத்தில் எளிதாகக் காணலாம். இலங்கைத் தீவு, மேற்கே கிழக்கு ஆபிரிக்கா முதல், கிழக்கே சுமாத்திரா வரையும், தென்திசையில் தென்துருவம் வரையும் பரந்து கிடக்கும் மாக்கடலில், இந்தியாவின் தென் முனையில் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதன் நில இயல் சார்ந்த சேர்க்கையில் ஐயப்பாடு கிடையாது.

---

*சமசமாஜக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர்



இதே போன்ற வரலாற்று ரீதியான ஓர் அமைப்பை ஐரோப்பாக் கண்டத்திலும் காணலாம். மேற்கே ஐபீரியன் தீபகற்பத்தையும், கிழக்கே ஊரல் மலைத்தொடரையும், வடக்கே ஸ்காண்டிநேவியாவையும், தெற்கே சிஸிலி, கிறீஸ் ஆகிய நாடுகளையும் கொண்ட ஐரோப்பா புவி இயல்சார்ந்த தனியொரு நில அமைப்பாகவே எப்பொழுதும் கருதப்படுகிறது. இலங்கை எப்படி இந்திய உபகண்டத்தை யொட்டி அமைந்துள்ளதோ, அப்படியே பிரிட்டிஷ் தீவுகள் ஐரோப்பா கண்டத்தையொட்டி அமைந்துள்ளதென்றும் கூறலாம். வரலாறு கண்டகாலம் முழுவதிலும் பிரிட்டன் ஐரோப்பா கண்டத்தின் விதியைத் தானும் பங்கிட்டுக் கொண்டதுடன், தனது சொந்தத் தலைவிதியைத் தானே நிர்ணயிக்கவும் முயற்சி செய்தது. சீஸரின் ரோமப்படை அணிகளும் பின்னர், ஜெர்மானிய பழங்குடியினரும் இன, மொழிவாரி எல்லைகளையும் கடந்து சென்று, ஐரோப்பியப் பிராந்தியத்தில் பரந்த சாம்ராஜ்யங்களைச் சமைத்தனர். பாப்பரசரின் மத ஆதிக்கத்தின் கீழும், அதன் அரசியற் கருவியான புனித ரோம சாம்ராஜ்யத்தின் கீழும் ஐரோப்பாக் கண்டத்தின் பெரும் பகுதி கொண்டு வரப்பட்டது.

ஐரோப்பாவுக்கும் இந்திய உப கண்டத்துக்குமிடையே நில அமைப்பிலும், அவற்றின் அரசியல் வளர்ச்சி வெவ்வேறு திசைகளில் இயங்குவதிலும் காணப்படும் ஒற்றுமை, "தேசிய சமுதாயப்" பிரச்சினையைப் புரிந்து கொள்வதற்கு முக்கியமாகப் பயன்படும். ஐரோப்பா இந்திய உபகண்டத்தை விட சற்று பெரியதாகும். அத்துடன் சனத்தொகையும் கொஞ்சம் அதிகம். ஐரோப்பாவின் அரசுகள் முதற்கண் மொழிவாரி - கலாசார அடிப்படையில் அமைந்தவைகளாகும். அவை ஒன்றுக்கொன்று தொடர்பான கோஷ்டிகளாக வலுப்படுத்தக்கூடியவைகளாக இருப்பதுடன், இந்திய உபகண்டத்தில் இருப்பதைப் போன்று மாறுபாடு உடையவைகளாகவும் இருக்கின்றன. ஆயினும் அவை தனித்தனி சுதந்திர "தேசிய சமுதாயமாக" விளங்கின. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக தங்களிடையே கடுமையான யுத்தங்களையும் நடத்தின; அத்தோடு உலக ஆதிக்கம் பெறுவதற்காக ஒன்றுடனொன்று போட்டியிட்டுக்கொண்டன. அண்மையிற்றான் ஐரோப்பாவின் மேற்குப் பாதி, தனது தனித்தனியான சந்தைகளை ஒன்றிணைப்பதை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார ஒத்துழைப்புக்கான திட்டங்களைத் தீட்டியது. கிழக்குப் பாதியோ, ருஷியரின் ஆதரவுபெற்று அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் தனது அபிவிருத்தித் திட்டங்களைச் சிலகாலமாக ஒருங்கிணைத்து வருகிறது. தனியார்துறையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள பொருளாதார உற்பத்தியின் உள்ளார்ந்த தாக்கங்களையும், மையநோக்கு இழுப்புகளையும் ஐரோப்பியப் பொதுச் சந்தை வெற்றி கொள்ளுமென்று தற்போது நம்ப இயலாது. மேற்கு ஐரோப்பாவினதும் கிழக்கு ஐரோப்பாவினதும் சமுதாய, பொருளாதார முறைகள் முற்றாக மாறுபட்டவைகளாகும். ஐரோப்பாவின் மேற்கும் கிழக்கும் இணைவது பற்றி கற்பனை செய்வதுகூடக் கடினம்.

இந்திய உபகண்டத்தின் நிலைமை சற்று வித்தியாசமானதாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உபகண்டத்தை ஆட்சி செய்தபொழுது பாகிஸ்தான், வங்காள தேசம், இந்திய யூனியன் ஆகியவை தனி ஓர் அரசியல் அமைப்பாக இருந்தன. நேபாளம், சிக்கிம், பூட்டான் ஆகியவற்றிலும் பிரிட்டிஷ் மேலாதிக்கம் நிலவியது. இந்தப் பட்டியலில் இலங்கையையும் சேர்த்தால், பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேறும் போது ஆறு தனித்தனி ராஜ்யங்கள் இருந்தன. பாகிஸ்தானிலிருந்து ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர அரசாக வங்காளதேசம் தோன்றியதால், இன்று எழு ராஜ்யங்கள் இருக்கின்றன. இந்திய யூனியனுள் ஏற்கனவே 20 ராஜ்யங்கள் வேறு இருக்கின்றன. இதுதவிர ''யூனியன் பிராந்தியங்கள்'' என்று கூறப்படும் சில பிரதேசங்களும் இந்தியாவில் உண்டு. இந்திய யூனியனில் 14 பிரதான மொழிகள் வழக்கத்தில் உண்டு. உபகண்டத்தின் எஞ்சிய பகுதிகளில் ஆறு அல்லது எழு மொழிகள் இருக்கின்றன. அப்படியிருந்தாலும், இந்திய யூனியனைத் தவிர்த்து, உபகண்டத்திலுள்ள போட்டா போட்டி தேசிய அரசுகள் திடமாக வலுவடையும் ஒரு போக்கு காணப்படவில்லை.

1947 ல் பிரிட்டிஷார் இந்தியாவைப் பிரிவினை செய்தபோது, இந்திய யூனியனுக்கு வலுமிக்க ஒரு எதிர்ச் சக்தியாக பாகிஸ்தான் அமைய வேண்டுமென பிரிட்டிஷார் விரும்பினார்கள். ஆனால் மூலவளங்களின் பற்றாக்குறையினால் இந்தப் பொறுப்பைப் பாகிஸ்தான் தாங்கமுடியாது என்பதை அவர்கள் உணர்ந்தபோது, அமெரிக்க அரசாங்கம் அவர்களின் இடத்தை நிரப்ப முன்வந்தது. ஆனால் பாகிஸ்தான் ஒரு நிலையற்ற அமைப்பாகவே காணப்பட்டது. கிழக்கில் வங்காளிகள் தங்களின் சொந்தச் சுதந்திர நாட்டை ஸ்தாபித்தது போக, மேற்குப் பாகிஸ்தானிலும் சிந்திகள், பத்தான்கள். பலூச்சிகள் ஆகிய மொழிவாரித் தேசிய இனத்தவர்கள் பஞ்சாபிகளின் மேலாதிக்கத்தினால் தொடர்ந்து பொறுமையிழந்து வருகிறார்கள். பாகிஸ்தானை விட மற்றைய உப கண்டத்து நாடுகளில் முஸ்லிம்கள் அதிகமாக வசிப்பதால் துண்டாடப்பட்ட பாகிஸ்தான், உபகண்டத்தில் முஸ்லிம்களின் 'புனித பூமி' என்று பாவனை செய்வதும் கடினமாகும்.

மத்திய கால ஐரோப்பாவில் மொழிவாரியாக இருந்த இனங்கள் முழு ''தேசிய சமுதாயங்களாக'' உருவெடுத்த போதிலும், இந்தியாவில் அதே போன்ற மொழி வாரியான இனங்கள் கட்டுப்படுத்தப்பட்டு இந்திய யூனியனில் (குறைந்த அளவில் பாகிஸ்தானில்) ஒரே குடையின் கீழ் இடம் பிடித்துக் கொள்ளத் தூண்டப்பட்டன. இதற்குக் காரணமென்ன? ஐரோப்பா 150 ஆண்டுகளாக ஏகாதிபத்திய ஆட்சிக்குக் கீழ் இருக்க வேண்டி ஏற்படாததும், ஐரோப்பாவின் முக்கிய நாடுகளில் முதலாளித்துவ புத்திஜீவிகள். தோன்றி, பிரபுத்துவ, மத, சமூக கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற விழைந்தபோது அந்நாடுகளுடைய பொருளாதாரம், ''தேசிய'' சந்தைக்குள் வர்த்தக, கைத்தொழில் வளர்ச்சியைத் தாங்கக் கூடிய அளவுக்கு விருத்தியடைந்திருந்ததுமே காரணம். ஆனால் ஐரோப்பாவில் மத்திய காலத்தில் மேலெழுந்தவாரியான ஒரு வித ஒருமைப்பாடு இருந்தது. கிறிஸ்தவம் பாப்பரசரின் ஒரு சீரான ஆதிக்கத்தை சமூக, கலாச்சார வாழ்க்கையில் ஏற்படுத்தியது. அத்துடன் புனித ரோம் சாம்ராஜ்யம் ஐரோப்பிய ஒருமைப்பாட்டுக்கு அரசியல் அர்த்தம் கொடுக்க முனைந்தது. உண்மையில், தேசியம், முதலாளித்துவம் ஆகியவற்றின் மலர்ச்சியினாலே ஐரோப்பாவில் பிராந்திய அரசுகள் உறுதிப்படுத்தப்பட்ட போது, நெப்போலியன் சாலமனுடைய கனவை நனவாக்கும் முயற்சியில் முன்னெப்பொழுதையும் விட மிக முன்னேறினான்.

எவ்வாறாயினும், ஒருவரை ஒருவர் அழிக்கும் போர் நடவடிக்கைகள், கடுமையான வர்த்தகப் போட்டி, பாப்பாதிக்கத்தின் கொடுமைக்கெதிரான நீண்டகால வீரப் போராட்டம், கடலோடும் நாடுகளிடையே வெளி உலகத்தைக் காலனிகளாகவும், தங்களின் ஆதிக்கப் பிரதேசங்களாகவும் பங்குபோடுவதில் ஏற்பட்ட போட்டா போட்டி, ஆகிய பாதைகளைக் கடந்தே



ஐரோப்பா எதிர்காலத்தை நோக்கி நடைபோட்டது. இந்த வளர்ச்சி ஒவ்வொரு பொருளாதார, மொழிவாரி, கலாச்சார அமைப்புகளினதும்: தனித்துவத்தை நிலைநாட்டியதுடன், அரசாங்க அதிகாரத்தைப் பிரயோகித்து பிராந்திய சந்தைகளில் வெளியாரின் போட்டிகளைத் தடுத்து பாதுகாப்பளித்தது. அத்துடன், கடல்கடந்த பிரதேசங்களைக் கொள்ளையடித்தது மூலமும், வர்த்தகம் மூலமும் பெறப்பட்ட இலாபகரமான வருமானங்களைத் தேசிய தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்தியது. காலப் போக்கில் சில ஏகாதிபத்திய ஆட்சிகளின் காலனிகள் பரந்த உத்தரவாதமளிக்கப்பட்ட சந்தைகளையும் தீராத மூலப்பொருள் வளங்களையும் அவர்களது கொழிக்கும் தொழில்களுக்கு வழங்கின.

ஐரோப்பிய நாடுகளில் தனித்தனி தேசிய சமுதாயங்களின் தோற்றமும், வளர்ச்சியும் ஐரோப்பிய ஆட்சி முறையின் மூன்று கொள்கைகளுடன் தொடர்பு படுத்தப்பட முடியும். முதலாவதாக, வெவ்வேறு மொழிவாரி, கலாசார அமைப்புகளின் உறவுகள் சமமற்றவைகளாகும். அவை இராணுவ, பொருளாதார உறவுகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், ஒன்றின் மீது ஒன்று ஆதிக்கம் செலுத்தின. இதன் விளைவாக தேசிய இறைமை கோரும் வலிமைமிக்க பரந்த ஆர்வமும், அன்னிய ஆட்சிக்கு எதிர்ப்பும் தோன்றின. இரண்டாவதாக, தேசிய இறைமைக்கான இயக்கம், எழுச்சி பெற்று வந்த முதலாளித்துவ புத்திஜீவிகளிடமிருந்தும், வர்த்தக வகுப்பினரிடமிருந்தும் இணைப்பையும் தலைமையும் பெற்றது. இவர்கள் தங்களின் பிராந்தியச் சந்தையை அன்னிய போட்டிகளிலிருந்து பாதுகாப்பதை புனித இலட்சியமாகக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. மூன்றாவதாக, ஒரு தனி மதமும், • ஒருமுகப்படுத்தப்பட்ட பிரபுத்துவ தேவாலயமும் கலாசார ஒருமையைப் பெருமளவு ஏற்படுத்தி வந்தபோது, ஜனரஞ்சகமான மொழியே ஏகாதிபத்தியத்திற்கு அல்லது பாப்பாதிக்கத்திற்கு எதிராக தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கப் பாலமாக அமைந்தது. இவ்வாறு தேவாலயச் சடங்குகளில் தேசியமொழியை உபயோகிக்கும் உரிமை பாப்பாதிக்கத்திற்கு எதிரான புரட்சியில் முக்கிய இடம் வகித்தது தற்செயலாக ஏற்பட்டதன்று. அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை. பிராந்திய சந்தைகளுக்குப் பாதுகாப்பு, ஜனரஞ்சகமான மொழிக்கு உரிமை ஆகியன ஐரோப்பியத் தேசிய சமுதாயங்களை உருவாக்கிய அடிப்படைக் கொள்கைகளாக அமைந்தன.

பிராந்திய தேசிய அரசுகள் தோன்றிய அதே சமயத்தில், ஐரோப்பாவின் பொருளாதாரம் கிராமிய நிலையிலிருந்து கைத்தொழிலின் முதற்படிக்குத் தாவியது. உழைப்பாளிகளைக் கொடுமையாகச் சுரண்டுவதையும், பண்டைய தொழில் நுட்பத்தையும், அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் முறை இருக்கும் போதே, தேசிய சமுதாயங்களைக் கட்டியெழுப்பும் நடை முறை ஆரம்பமாகிவிட்டது. பிரித்தானிய தேசிய அரசு 17ம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டிலேயே ஏறத்தாழ உறுதியாக நிலைநிறுத்தப்பட்டுவிட்டது. ஆனால் அங்கு கைத்தொழிற் புரட்சி சூடுபிடிக்க மேலும் நூற்றாண்டுகள் எடுத்தன. காலனிகளைக் கொள்ளையிட்டு பெருமளவில் திரட்டப்பட்ட மூலதனம் பிரிட்டனில் வந்து குவிந்தது இந்தக் கைத்தொழில் புரட்சி உருவாக உறுதுணையாக இருந்ததென்பது நாமறிந்ததே. அத்துடன் பிரிட்டிஷ் உற்பத்திப்பொருட்களுக்கு நிச்சயமான சந்தையாக காலனி நாடுகள் விளங்கியதும் கைத்தொழிற் புரட்சி பெருமளவு உந்தப்பட்டதற்குக் காரணமாகும். வேறு வார்த்தைகளிற் கூறின், ஐரோப்பாவில் தேசிய சமுதாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சி பெற்ற நேரத்தில் உழைப்பின் குறைந்த உற்பத்தித் திறனிலேயே கைத்தொழில் உற்பத்தி தங்கியிருந்தது. மேலும் அதன் விரிவுக்கும் வளர்ச்சிக்கும் தேசிய சந்தையின் கட்டுப்பாடுகள் உடனடித் தடையாக இருக்கவில்லை.

கைத்தொழிற் புரட்சி இந்த ஐரோப்பிய நாடுகளின் தேசிய பொருளாதாரத்திலுள் உற்பத்தித் திறனில் எற்பட்ட திடீர் எழுச்சியே யன்றி வேறில்லை. இதனால் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கம் அதற்குத் தகுந்தபடி சந்தையை விரிவாக்கும் அவசியத்தையும் தோற்றுவித்தது. அந்நிலையிலும் மூலதனத்தைத் திரட்டல் உழைப்பைக் குரூரமாகச் சுரண்டுவதிலேயே தங்கியிருந்ததால், விரிவடைந்த சந்தையைச் தேசிய எல்லைகளுக்குள் மட்டும் அடைத்து வைத்திருக்க முடியவில்லை. முக்கியமாக, இந்தச் சந்தைகளை அன்னிய ஊடுருவல்களிலிருந்து பாதுகாக்க வலிமை மிக்க அரசாங்க இயந்திரம் இல்லாத நேரத்தில், மேற்கண்ட காரணமே வெளி உலகுடன் வர்த்தகத்தைத் தீவிரப்படுத்த ஏதுவாக இருந்தது. சந்தைகளைத் தேடும் முயற்சியே காலனிகளைக் கைப்பற்றுவதற்கும், அவற்றை அன்னிய வர்த்தக அரசுகளிடமிருந்து பாதுகாப்பதற்கும், அவற்றை மூலப்பொருட்களின் தோற்றுவாயாகப் பயன்படுத்துவதற்கும், அவற்றை முதலீடு செய்வதற்கான விளை நிலங்களாக்குவதற்கும், வழி வகுத்தது. வளர்ச்சியுறும் கைத்தொழில் முதலாளித்துவம் நிதி முதலாளித்துவமாக மாறியது. நிதி முதலாளித்துவத்திற்கு மற்றொரு பெயர் ஏகாதிபத்தியம். ஐரோப்பாவுக்கு வெளியே காலனிகளும், ஆதிக்கப் பிரதேசங்களும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு உட்படாதிருந்தால். கட்டாயத்தின் பேரில் ஒருங்கிணைக்கப்பட்ட கண்டத்திற்குள்ளேயே மாநில அரசுகள்தங்கள் பரஸ்பர உறவுகளை நிலைநாட்டுவதற்காக ஒருவரையொருவர் அழிக்கும் போர்களில் ஈடுபட்டிருப்பார்கள். இதன் விளைவாக, பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு தனி அரசாகவோ, ஏறக்குறைய தன்னாட்சியுடைய நாடுகளின் சமஷ்டி அரசாகவோ மாறுவதற்கு ஐரோப்பா நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கலாம்.

ஐரோப்பாவில் கிறிஸ்துவத்தைப் போல், இந்து கலாச்சார பகுத்திவாக்கம், இந்திய உப கண்டத்தில் ஒருமைப்பாட்டின் தோற்றத்தில் முக்கிய இடம் வகித்தது. ஐரோப்பாவில் நடந்ததைப் போல சாம்ராஜ்யங்கள் எழுச்சியுற்றும் வீழ்ச்சியுற்றும் உப கண்டத்தின் சிறிய, பெரிய நிலப்பரப்புகளை ஏகாதிபத்திய ஆட்சிக்குள் கொண்டுவந்தது. அசோக சக்கரவர்த்தியின் பேரரசின் கீழ் தக்கிணத்தைத் தவிர, மற்றெல்லாப் பகுதியும் கொண்டுவரப்பட்டது. ஆனால் இந்து மதம் பிரபுத்துவ கிறிஸ்தவ தேவாலயத்தையோ குருமாரின் சங்கத்தையோ ஒத்திருக்கவில்லை. அத்துடன் பேரரசு அல்லது பிரதேச ஆட்சி கிராம சமுதாயத்தினரின் வாழ்க்கையில் மிகச் சொற்ப தாக்கத்தையே ஏற்படுத்தியது. இந்திய, ஐரோப்பிய சமுதாயங்களின் பரிணாம வளர்ச்சியின்போது அவற்றிற்கிடையேயிருந்த அடிப்படை வித்தியாசங்களை "ஆசிய சமுதாயம்" பற்றி மார்க்ஸ் கொண்டிருந்த பொதுவான கருத்துகள் திருப்திகரமாகத் தெளிவு படுத்துகின்றன.

"சீதோஷ்ண நிலைமையும், பிராந்திய நிலைமையும் — குறிப்பாக, சகரா முதல், அரேபியா, பாரஸீகம், இந்தியா, டார்டரி ஊடாக மிக உயர்ந்த ஆசிய உயர் நிலப் பிரதேசங்கள் வரை பரந்து விரிந்து கிடக்கும் விரிவான பாலைவன நிலப்பரப்பு — கீழைத்தேய விவசாயத்தின்



அடிப்படையான நீர் நிலை, கால்வாய் வாயிலாக நீர் பாய்ச்சும் செயற்கை நீர்ப்பாசனத்தை உருவாக்கின." என்று மார்க்ஸ் "நியூயோர்க்" ஹெரால்ட் டிரிபியூன்" பத்திரிகையில் 1853 எழுதியுள்ள ஒரு கட்டுரையில் தனது கருத்தினை விளக்கியுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது. "ஐரோப்பாவில், பிளான்டெர்சிலும் இத்தாலியிலும் நடை பெற்றதைப்போல தனியார்துறை நிறுவனங்களாலும், சிரமதான ஸ்தாபனங்களாலும் இந்த" ஆரம்பத் தேவை" நிறை வேற்றப்பட்டது. ஆனால் இங்கு இதனை அனுமதிக்க முடியாத அளவுக்கு "பண்பாடு தாழ்ந்த நிலையில் இருந்ததுடன் பரந்த நிலப்பரப்பு மிக விரிவானதாகவும் இருந்தது." ஆகவே ஆசிய அரசாங்கங்கள் அனைத்தின் மீதும் ஒரு பொருளாதார பணி சுமத்தப்பட்டது. அதுதான் பொது வேலைகளை வழங்கும் பணி, ஒரு மத்திய அரசாங்கம் இப்பணியை நாடெங்கிலும் செயல்படுத்தும் போது, மக்கள் சிறு சிறு மையமாக அமைந்துள்ள இடங்களிற் திரண்டார்கள். "விவசாய, உற்பத்தித் தொழில்கள் ஆங்காங்கு ஒன்றாக இணைந்திருந்தமையால்' அந்த மையமான இடங்கள் முற்றாகத் தன்னிறைவு பெற்றிருந்தன. பணிகளைப் பாரம்பரியமாக பல்வேறு பிரிவுகளாக்கி நிறைவேற்றி வந்தமையால், அவர்கள் கிராமத்திலேயே தங்களின் தேவைகளை யெல்லாம் உற்பத்தி செய்து கொண்டார்கள். மார்க்ஸ் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் 1812 ம் வருட பழைய அறிக்கையொன்றினைக் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கை கூறுவதாவது.

"கிராமங்களின் எல்லைகள் மிக அபூர்வமாகவே மாற்றியமைக்கப்பட்டன. சில சமயங்களில் கிராமங்களுக்கே தீங்கு விளைந்தாலும், யுத்தம், பஞ்சம், நோய் ஆகியவற்றால் கிராமங்கள் பாழ்பட்டாலும் அதே பெயர், அதே எல்லைகள், அதே நலன்கள், அதே குடும்பங்கள், ஆண்டாண்டுகளாக நீடித்து நிலைத்திருந்தன. அரசு பிரிந்தாலும் சிதறுண்டாலும் கிராமவாசிகள் அதுபற்றி கவலைப்படவில்லை. கிராமம் முழுமையானதாகத் தொடர்ந்திருப்பதுடன், எந்த அதிக்கத்தின் கீழ் அது கொண்டு வரப்படுகிறது, இன்றேல் எந்த ஆட்சி அதன் மீது சுமத்தப்படுகிறது என்பன பற்றி அவர்கள் அக்கறை காட்டியதில்லை."

மார்க்ஸின் பொதுவான கருத்து ஆசிய சமுதாயம் அதன் அடிப்படையில் — அதாவது. கிராம சமுதாயத்தில்—எதுவித மாற்றமுமின்றி நீடித்தது என்பதே. கிராம சமுதாயம் பளபளப்பான மன்னர் ஆட்சியைத் தனது முதுகில் தாங்கிக் கொண்டிருந்தது. காரணம், விவசாயத்துக்கு நீர்ப்பாசன வசதிகளை அளித்தல், மற்றும் பொதுப்பணிகளை நிறைவேற்றுதல் ஆகியவை சம்பந்தமான முக்கிய பணிகளை அந்த ஆட்சி நிறை வேற்றி வந்ததே. ஆனால் மன்னர் ஆட்சியின் உயர்பீடத்தில் ஏற்படும் மாற்றங்களில் கிராம சமுதாயம் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. தங்களைத் தனியாக விட்டு விடவேண்டுமென்றே அவர்கள் விரும்பினார்கள். எந்த ஆட்சியாளரும் இதற்கு முன்பு செய்யத் துணியாததை பிரிட்டிஷார் செய்தனர். அதாவது: கிராம சமுதாயத்தைத் தனியாக விட்டுவைக்க அவர்கள் மறுத்தனர். மத்திய அரசாங்கத்தின் பொறுப்புகளை கையேற்ற அவர்கள் நாடெங்கிலும் பரந்து கிடந்த பொதுப்பணிகளை நிறைவேற்ற வேண்டிய தங்களின் கடமைகளைப் புறக்கணித்தனர். அத்துடன், கிராம சமுதாயம் எந்தப் பொருளுற்பத்தியின் மீது தங்கியிருந்ததோ, அந்த உற்பத்தியை அழித்தொழிக்கவும் அவர்கள் ஆரம்பித்தனர். "ஆசிய சாம்ராஜ்யங்களில் விவசாயம் ஓர் அரசாங்கத்தின் கீழ் சீர்கெட்டதும், மற்றோர் அரசாங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் மீண்டும் சீர்பட்டதும் நமக்குத் தெரியும். ஆதலின் பொதுப்பணிகளைப் பறக்கணித்தல் பெரும் கேட்டை உண்டாக்கிருக்காது.'' என்று மார்க்ஸ் கூறுகிறார். ஆனால் இச்சிறு சமுதாயங்கள் தத்தம் உள்ளூர் தொழில்களை ஆதாரமாகக் கொண்டிருந்தன. அவர் மேலும் கூறுவதாவது: ''ஆங்கிலேயரின் தலையீடு நூல் நூற்பவரை லாங்காஷயரிலும், நெசவாளரை வங்காளத்திலும் அமர்த்தியது; இல்லையேல் இந்திய நூற்பாளர், நெசவாளர் ஆகிய இருவரையும் துடைத்தெறிந்து, அரைகுறையாக நாகரிகமடைந்த இச்சிறு சமுதாயங்களை அவர்களின் பொருளாதார அடிப்படையைத் தகர்த்தெறிந்தது மூலம் கலைத்துவிட்டது. உண்மையைக் கூறின், இவ்வாறு ஆங்கிலேயரின் தலையீடு ஆசியாவிலே இதுவரை கேட்டிராத ஒரு மகத்தான சமுதாயப் புரட்சியையே தோற்றுவித்தது.'

இந்நிலையில், கிராம சமுதாயத்தின் அமைதியும், நடு நிலை அமைதியும் தகர்க்கப்பட்டாலன்றி, கிராம உற்பத்தியாளனை வெளியிலுள்ள பொருளாதாரத்துடன் செயல் ரீதியான உறவு கொள்ளும்படி செய்தாலன்றி, இந்திய உபகண்டத்தில் பொருளாதாரம் திடமாக வலுவடைவதோ, பொருளாதார வளர்ச்சியோ ஏற்பட முடியாது. ஏனைய எல்லாவற்றிலிமிருந்தும் ஒதுக்கட்பட்டு தனியாக நிற்கும் ஒரு தனி மக்கள் பிரிவு குறுகிய, சுய நல, அறிவீன மனப்பாங்குகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கவே முடியும்.

அவர்களின் காட்டுமிராண்டித்தனமான தற்பெருமை பாராட்டும் ஆணவத்தைப் பற்றி மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார். ''ஒரு சில இழிந்த நிலத்துண்டுகளின் மீது முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்த அவர்களின் காட்டு மிராண்டித்தனமான தற்பெருமை பாராட்டும் ஆணவம் சாம்ராஜ்யங்கள் அழிந்ததை அமைதியாகக் கண்டது.'' அத்தகைய ஓர் அடிப்படையின் மீது எந்த ஒரு தேசிய சமுதாயத்தன்மையும் வளர முடியாது. வெளியாரின் ஆதிக்கத்தை அப்படியே தாங்க வேண்டியதாயிற்று. நகரங்கள் தோன்றின. மேல் வர்க்கங்களுக்காகவும், மன்னரின் அரசவைக்காகவும், உள்நாட்டு, வெளி நாட்டு வர்த்தகர்களின் ஏற்றுமதிக்காகவும், ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்யும் அடிப்படையிலே அந்த நகரங்கள் வளர்ந்தோங்கின. பணமோ வியாபாரச் சரக்குகளோ கிராமத்தினுள் ஊடுருவ முடியவில்லை. பிரதேச மொழிகள் மக்கள் ஒருவர்க்கொருவர் புரிந்து கொள்ள முடியாத எண்ணற்ற பேச்சுவழக்குகளைக் கொண்டிருந்ததால், அந்த மொழிகளின் வளர்ச்சியும் பெருமளவில் தடைப்பட்டது. ஐரோப்பாவின் தேசிய இன வளர்ச்சியை ஏற்படுத்திய காரணங்களை இந்திய உபகண்டத்தில் காணமுடியவில்லை.

அழியாத பண்டைப் பொருளாதார அமைப்புகளிலிருந்து இந்திய உபகண்டத்தை விடுதலை செய்த புரட்சிகரமான விளைவு பிரிட்டஷார் இந்தியாவைக் கைப்பற்றியதால் ஏற்பட்டதென்றால், பிராந்திய தேசிய சமுதாய-அரசுகளை உருவாக்கி, வலுப்படுத்திய ஐரோப்பிய அனுபவம் திரும்பவும் ஏன் நிகழமுடியாது? கிராம சமுதாயம இயங்கிவந்த செயல் பூர்வமான ஏற்பாடுகளையெல்லாம் அழித்ததில் பிரிட்டிஷார் நீண்ட வரலாற்று இலட்சியங்களை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்பதே மேற்கண்ட கேள்விக்கான விடை. பிரிட்டஷார் பிரிட்டனில் தங்களின் சொந்த நெசவுத் தொழிலைக் கட்டி யெழுப்புவதற்காகவும், பிரிட்டிஷ் ஜவுளிகளுக்கு இந்தியாவில் ஒரு சந்தையை உருவாக்குவதற்காகவும், இந்திய ஜவுளி உற்டத்தியை அழித்தார்கள். அவர்களின் உற்பத்தித் திறன் அவர்களாலேயே அழிக்கப்பட்டது. கிழக்கு இந்தியக் கம்பெனி செய்தது போல, அவர்களும் உபகண்டத்தை கொள்ளையிட ஏற்பாடு செய்தார்கள். தங்கள் நாட்டில் மூலதனத்தைத் துரிதமாகக் கொண்டுபோய் குவிப்பதற்காகவே அவர்கள் இதனைச் செய்தார்கள். அவர்கள் பின்னர் ஒரு திறமையான துறைமுக, ரயில்வே போக்கு வரத்து முறையை மூன்று காரணங்களுக்காக உருவாக்கினார்கள். தங்கள் நாட்டின் தொழில்களுக்கு மூலப்பொருட்களைத் தொடர்ந்து வழங்குதல், தங்களின் உற்பத்திப் பொருட்களை இந்தியாவில் சந்தைப்படுத்துதல், மிகுதியான மூலதனத்தைத் தங்கள் நாட்டில் தனியார் துறையில் இலாபகரமாக முதலீடு செய்தல் ஆகியவைகளே அந்த மூன்று காரணங்கள். வேறு வார்த்தைகளிற் கூறின், பாரம்பரிய இந்தியப் பொருளாதாரத்தின் அழிவுக்கும், பிரிட்டனின் பொருளாதார, இராணுவ வலிமை விரிவடைந்து திடமானதற்குமிடையே காரண ரீதியான நேரடி உறவு உண்டு. இந்த அழிவிலிருந்து விடுபடவும், இந்தியாவில் தேசிய சமுதாயம் வளர்ச்சி பெறவும், இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமிடையே இருந்த காலனி உறவை மாற்ற வேண்டியது அவசியமாயிற்று.

உபகண்டத்தில் தேசிய சமுதாயம் வளர்ச்சி பெறாதிருந்தும்கூட, பிரிட்டிஷ் ஆட்சி, வரலாற்றில் முதன்முறையாக அதன் அரசியல் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தியது. இது ஏறத்தாழ சுதந்திரமாக இருந்த சிற்றரசர்கள் மீது, முன்னால் சாம்ராஜ்யங்கள் செய்தது போல, ஏகாதிபத்திய சிறப்புப் பட்டங்களைச் சுமத்தியது மாத்திரமன்று. அரசியல், இராணுவ பலம் பிரிட்டிஷாரின் கையில் உறுதியாக இருந்ததுடன், பிரிட்டிஷ் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் அது உபயோகிக்கப்பட்டது. அதுவரை இந்தியாவின் வெறும் கற்பனைக் கதையாக இருந்தவை உண்மையானவைகளாக உறுப்பெற்றன. அதாவது: இந்திய உபகண்டம், பிராந்திய மொழிவழி தேசிய அரசுகள் ஏற்பட்டு வலுவடையும் கட்டத்தைத் தாண்டிச் சென்று, ஐரோப்பாக் கண்டத்திலும் பார்க்க ஓடி முன்னால் பாய்ந்து விட்டது. பிரிட்டிஷ் ஆட்சி ஒரு நூற்றுண்டுக்கு மேல் இந்தியாவில் நீடித்திருந்ததால் இந்தியாவின் அரசியல் ஒருமைப்பாட்டை இலகுவாக சிதைக்க முடியவில்லை. போக்குவரத்து முறை மென்மேலும் வளர்ச்சி பெற்றதாலும், தேசியச் சந்தை திடமாக வலுப்பெற்றதாலும், நாடெங்கிலும் மேவிய முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட, முழு நாடும் ஒன்று என்ற ரீதியில் சிந்திக்கக் கற்றுக் கொண்ட நவீன புத்திசீவிகள் தோன்றியதாலும், இந்தியாவின் அரசியல் ஒருமைப்பாடு முறையாக வலுவடைந்தது.

உப கண்டத்தில் பிரிட்டிஸார் உருவாக்கிய அரசியல் ஒருமைப்பாட்டின் அளவையும் காரணத்தையும் மிகைப்படுத்திக் கூறவேண்டிய தேவையில்லை. முழு ஒருமைப்பாடு ஏற்பட்டதற்கான முன் நிபந்தனைகள் சில நிச்சயமாக உண்டு. உதாரணமாக, உறுதிக்கும் நியாயத்துக்கும் புகழ் பெற்றதும், மிகச் சிறப்பாக திறமையுடன் இயங்கியதும், முற்றுக நவீனமயமானதுமான அரசாங்க இயந்திர மொன்று இருந்தது. அத்துடன், புத்திசீவிகளில் சிறந்த பகுதியினரை அரசாங்கச் சேவையிற் சேர்த்துக் கொண்ட ஒரு முறையும் இருந்தது. ஆயுதப் படைகளும் அரசாங்க சேவையைச் சேர்ந்தவைகளே. அவைகளின் போர்க்குணங்கள் உலகப் புகழ் பெற்றவைகளாகும். உபகண்டத்திற் பாதுகாப்பையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அவை போதுமானவைகளாகத் தெரிந்தன. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியாளர் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் முதலாளித்துவ புத்திசீவிகளைத் தோற்றுவித்து—ஆனால் ஏற்றத்தாழ்வாக—விரும்பியபடி அவர்களை உருவாக்கிக் கொண்டார்கள் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அவர்கள் நிர்வாகிகளாக, வழக்கறிஞர்களாக, டாக்டர்களாக, வர்த்தகப் பிரமுகர்களாக இருந்தாலும் சரி, இராணுவ அதிகாரிகளாக இருந்தாலும் சரி,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் அபிலாஷைகள் இந்தியாவில் ஒரு தனி பகுதிக்கு மட்டும் கட்டுப்பட்டவைகளாக இருக்கவில்லை. முழு உபகண்டத்தையும் ஒன்ருக உள்ளடக்கிய ஒரு நிறுவனத்திற்ருன் அவர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள். இது தவிர தொழிலதிபர்கள், முதலீடு வழங்குகிறவர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் அடங்கிய துரிதமாக வளர்ந்து வந்த ஒரு வர்க்கமும் இருந்தது. அவர்கள் பிரிட்டிஷ் நிதி, தொழில், வர்த்தக அமைப்புகளைச் சார்ந்து, அவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தாலும், — சில சமயங்களில் அதே காரணத்தால் — தங்களின் தனியான சுரண்டல் பிரதேசங்களுக்கு அவர்கள் சுயாட்சி கோரினர்கள். இந்த சுதேசி முதலாளி வர்க்கம் தேசியச் சந்தையில் தங்களுக்கு விசேட சலுகை காட்டவேண்டுமென்ற ஒரு வலிமை மிக்க உரிமைக் கோரிக்கையைத் துணிந்து முன்வைத்தார்கள். அத்துடன் அவர்கள் தேசியச் சந்தையினுள் அவர்களின் பிரிட்டிஷ் போட்டியாளர்கள் உட்பட அன்னியர்கள் நுழைவதைத் தடுப்பதற்காகவும் முயற்சி செய்தனர். பிரிட்டிஷ் போட்டியாளர்களோ அரசாங்க அதிகாரத்தின் வலிமையைக் கொண்டு தேசியச் சந்தையினுள் ஏற்கனவே நுழைந்திருந்தார்கள்.

இறுதியாக, உபகண்டத்தில் வசிக்கும் பல்வேறு மொழிகளையும், மதங்களையும், சமூக பொருளாதார வர்க்க வித்தியாசங்களையும் கொண்ட பல்வேறு மக்களின் உணர்வை ஒன்றிணைப்பதிலேயே உபகண்டத்தை ஒன்றிணைக்கும் ஆற்றல் தங்கியிருக்க வேண்டும். இல்லையேல், தனது விருப்பத்தை உபகண்டத்தின் மக்கள் மீது சுமத்தக்கூடியதும், அதே சமயத்தில் ஒரு தேசிய சமுதாயத்தின் பல்வேறு பண்புகளைக் கொண்ட அடர்த்தியாக இணைந்து நிற்காத பகுதிகளை உறுதியான, நன்கு இணைக்கப்பட்ட, திறமையாக இயங்கும் ஒரு சமுதாய இயந்திரமாக உருவாக்ககூடிய ஆற்றல் கொண்டதுமான ஒரு வலிமை மிகுந்த புதிய ஆளும் வர்க்கம் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குப் பதிலாக ஆட்சிபீடமேற வேண்டும். ஆனல், பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேறத் தீர்மானித்திருப்பதாக அறிவித்த பொழுது, மேற்கண்ட இரண்டில் ஒன்று கூட இந்திய நிலைமையில் இருக்கவில்லை.

மக்களிடையே ஒருங்கிணைந்த தேசிய உணர்ச்சி இருக்க வேண்டியதற்குப் பதிலாக, வெவ்வேருகப்பிரிந்து போன மத, மொழி, சாதி உணர்ச்சியே மக்களின் மனபபான்மையில் மேலோங்கி நின்றதாகத் தெரிந்தது. 1942 ஆகஸ்டில் ஆரம்பமான மக்கள் எழுச்சி பரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிரான ஒரு உண்மையான புரட்சிகர இயக்கமாக வளர்ச்சி பெறத் தவறியதின் விளைவாக, தேசிய உணர்ச்சி பொதுவாக பின்னடைந்ததுடன், சாதி, சமய, மொழி முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சார்புடைய மனப்பான்மை வலுவடைந்தது. யுத்தம் முடிந்ததும் இந்திய கப்பற் படையினர் கலகம் செய்ததை யொட்டியும், சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய இராணுவத்தினருக்கெதிராக நடத்தப்பட்ட நீதிமன்ற விசாரணையை மக்கள் ஆட்சேபித்ததை யொட்டியும், தேசிய உணர்ச்சிகள் மீண்டும் கிளர்ந்தெழுந்தன. ஆனல், தேசியத் தலைமை சமரசம் மூலம் தீர்வு காண உறுதி கொண்டிருந்தது. ஆகவே மக்கள் இயக்கம் மீண்டும் ஒருமுறை தணிந்துவிட்டது. அப்பொழுது தீவிர வெறிகொண்ட வகுப்புவாத மனப்பான்மை மறுபடியும் தலை தூக்குவதை எதுவும் தடுத்து நிறுத்த முடியவில்லை. இந்த நிலை, காங்கிரஸ் தலைமை தாங்கிய தேசிய இயக்கத்தின்



ஆதரவாளர்களுக்கும் ஜின்னு தலைமைதாங்கிய தேசியவாதத்துக்கெதிரான முஸ்லிம் லீக்கின் ஆதரவாளர்களுக்குமிடையே உபகண்டம் பெருமளவு பிரிக்கப்பட்ட பொழுது தெளிவாயிற்று. நாட்டின் பிரிவினைக் கோரிக்கை முக்கியத்துவம் பெற்றது. நாடு முழுவதும் தனது விருப்பத்தை அமுல் செய்யக் கூடிய ஆற்றலோ, முஸ்லிம், இந்து மக்களிடையே தலைதூக்கிய தற்கொலைப் பகைமை அலைகளைக் திருப்பி உருட்டித் தள்ளக்கூடிய வல்லமையோ, உள்ள ஒரு பலம் வாய்ந்த ஆளும் வர்க்கம் இருக்க வில்லை. ஆகவே பிரிட்டிஷார் தாங்களே ஒருங்கிணைத்த நாட்டைப் பிரிவினை செய்து, அந்தப் பிரிவினையின் வழியாக இந்தியாவிலிருந்து தங்களின் அரசியல் ஆதிக்கத்தை வாபஸ் செய்து கொண்டார்கள்.

இதன் கருத்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 1947ல் இந்தியாவில் ஏற்பட்ட பிரிவினையில் துரதிஷ்டவசமாகக் கட்டுண்டிருந்தது என்பதல்ல. அது நாட்டை ஒரு தனிக் காலனியாக ஆண்டதென்பது உண்மையே. ஆனல் அது அப்படி செய்தபோது இந்திய சமுதாயத்தில் பிரிவினைகளை வற்புறுத்தியும் மிகைப்படுத்தியும் வந்ததுடன், நாட்டில் பிரதான மக்கள் பகுதியினரில் ஒரு பகுதிக்கெதிராக மற்ரெரு பகுதியைத் தூண்டிவிட்டுக் கொண்டும் இருந்தது. குறிப்பாக அது இந்துகள், முஸ்லிம்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரிடையே வகுப்புவாத அரசியல் ஸ்தாபனங்களைச் சுறு சுறுப்பாக வளர்த்து வந்ததுடன், அவற்றை இந்திய தேசிய காங்கிரஸுக்கெதிராகவும், மதச் சார்பற்ற அரசியல் இயக்கங்களுக்கெதிராகவும் மிக சாணக்கிய முறையில் உபயோகித்து வந்தன. இந்தக் கண்ணேட்டத்திற் பார்த்தால், வகுப்புவாத அடிப்படையில் நாட்டின் பிரிவினை பிரிட்டிஷ் ஆட்சியின் தவிர்க்க முடியாத விளைவாகும். ஆனல் இதற்கு பிரிட்டிஷாரே முற்ருகப் பொறுப்பல்லர். மகாத்மா காந்தியின் கீழ் காங்கிரஸ் அரசியல் உருவாக்கப்பட்டதே ஒரு சமயப் பகட்டில் தான். அந்த சமயப் பகட்டு உருவத்திலும் உள்ளடக்கத்திலும் இந்துவாகவே இருந்தது. குர்-ஆனிலிருந்தோ, விவிலியன் நூலிலிருந்தோ ஒரு சில பகுதிகளை எடுத்து வாசித்தாலும் கூட, இம்மாதிரியான அரசியல் இந்திய மக்கள் அனைவரையும் சாதி, சமய மொழி பேதமின்றி ஒன்றுபடுத்தக்கூடிய அரங்கமாக விளங்கமுடியவில்லை. ஏகாதிபத்தியத்துக்கெதிரான தேசியப் போராட்டத்தின் தலைமையில் சமயச் சார்பற்ற அரசியல் இல்லாதிருந்தமை பிரிட்டிஷாருக்குச் சாதகமாக அமைந்துடன், முஸ்லிம்கள், 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் மத்தியிலிருந்த வகுப்புவாத வெறியர்களுக்குத் தத்தம் சமூகங்களுள் காணப்பட்ட தேசிய - எதிர்ப்பு மனப் போக்கை மென் மேலும் வலுப்படுத்த உதவியாகவும் இருந்தது. இவ்வாறு, பிரிட்டிஷார் இந்தியாவை ஒருங்கிணைத்தது ஏகாதிபத்திய ஆட்சியைத் தொடர்ந்து நடத்துவதை நிபந்தனையாகக் கொண்ட ஒரு நிர்வாக சாதனையாகும். ஆனல் காங்கிரஸ் விளக்கிக் கூறியபடி, இந்த ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தி, செறிவூட்டும் ஆற்றல் தேசியவாத அரசியலின் அமைப்புக்கு இயல்பாகவே இருக்கவில்லை.

இந்திய தேசிய சமுதாயத்தின் இதயத்திலுள்ள ஒரு முரண்பாடான தனித்தன்மையையே இது எடுத்துக்காட்டுகிறது. பிரிட்டிஷ் ஆட்சி இந்திய அரசை ஐரோப்பாவின் தேசிய அரசின் எல்லைகளுக்கு அப்பால் எடுத்துச் சென்றதுடன், பல மொழிவாரி - கலாசாரத் தேசிய இனங்களுக்காக ஒரு பொதுவான நிர்வாக, பொருளாதார அ[illegible]பையும் அளித்தது. அத்தோடு அது பொதுவான நோக்கங்களை அடைவதற்காக ஒரு தனி மத்திய அரசாங்கத்துக்கு அடிபணியும் அனுபவத்தின் மூலம் அந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய இனங்களை ஒழுங்குபடுத்தியது. அடுத்தபடியாக, இந்த ஒருங்கிணைப்பில் காணப்பட்ட குறைபாடுகள் ஐக்கியத்தின் தளர்ந்த அமைப்பிலிருந்தும், ஒவ்வொரு மொழிவாரி தேசிய இனத்தினுள் ஏற்பட்டிருந்த ஒருமைப்பாட்டிலிருந்தும், தோன்றியவைகளாகும். இந்த ரீதியில், மதம், சாதி, வர்க்கம் ஆகியவை வலுவான பிரிவினைக் காரணங்களாகும். அவை இறுதியில் பிரிட்டிஷார் நிர்வாகரீதியாக உருவாக்கிய பரந்த ஒருமைப்பாட்டையும்கூட சிதறடித்துவிடும். இந்த முரண்பாட்டுக்குத் தீர்வுகாண தேசியத்தின் நோக்கத்தில் ஒரு புதிய மாறுதலை ஏற்படுத்துதல் வேண்டும். இந்த மாறுதலைக் குறுகிய உள்ளூர் மட்டத்திலும், நாடு முழுவதையும் மேவிய பரந்த மட்டத்திலும் செய்தல் வேண்டும்.

குறுகிய உள்ளூர் மட்டத்தில், மொழிவாரி தேசிய இனங்களின் ஓரினத்தன்மை ஒருமைப்பாட்டை உருவாக்கும் வலிமை மிக்க ஒரு சக்தி என்பதில் ஐயமில்லை. ஆனால், இது ஒருமைப்பாட்டை உருவாக்கும் ஒரே சக்தியாக மட்டும் இருந்தால், பரந்த நாட்டுப் பகுதிகளிலுள்ள ஏனைய இனங்களும், சக்திகளும் மொழிவாரி ஒற்றுமையின் பிணைப்பைச் சிதறடித்துவிடலாம். பிரிட்டிஷ் இந்தியாவின் வரலாற்றில் உண்மையில் நடைபெற்றதும் இதுதான். ஏகாதிபத்திய ஆட்சிக்கு முடிவு கட்டுதல், மக்களை நிலப் பிரபுக்களின் பிடியிலிருந்தும் முதலாளித்துவச் சுரண்டலிலிருந்தும் விடுதலை செய்தல், போன்ற பொதுவான ஏனைய பொது விடயங்களுடன் சேர்த்து மொழிவாரி ஒருமைப்பாட்டை வலுப்படுத்த தேசியத் தலைமை தவறி விட்டதால், வங்காளிகள், பஞ்சாபிகள் போன்ற தேசிய இனங்கள் மத-வகுப்புவாத முறையில் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டதுடன், இந்தியாவின் உடலிலிருந்து பாகிஸ்தான் என்னும் புதிய அரசு வெட்டியெடுக்கப்பட்டது. அதனைச் செய்யும் போது மதத்தின் இணைப்புச் சக்தியைத் தேசிய சமுதாயத்தின் ஏனைய கொள்கைகளுக்கு மேலாகத் தூக்கிப் பிடித்தனர். ஆனால் தேசிய இனத்தைச் சீர்குலைக்கும் இந்தப் போக்கு திடீரென ஏற்பட்ட செயலன்று. 1920க்கும் 1930க்கும் இடைப்பட்ட பத்தாண்டுகளின் முதற் பகுதியில் பொங்கிய தேசிய மக்கள் போராட்டத்தின் முதலாவது அலை தோல்விகண்டது முதல் இது நடைபெற்றுவந்தது. கிளாபத் கிளர்ச்சியின் மூலம் இந்து - முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்த செய்த முயற்சியைக் கண்டோம். தேசிய சமுதாயம் சிதறுண்டு போகும் நிலைமையைச் சரிவர உணர்ந்து அதனை முற்றாகத் நீக்கிவிட முடியாவிட்டாலும், அந்தப் போக்கு வளருவதைத் தடுத்து நிறுத்த தேசியத் தலைமையால் ஏன் முடியவில்லை.?

இதற்கு விடை, இந்தியாவில் 20ம் நூற்றாண்டின் தேசிய இனப் பிரச்சினைகளைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இந்திய தேசியத் தலைமையில் சமூக மிதவாதம் ஆழமாக வேரூன்றி இருந்ததென்பதே. முஸ்லிம் வகுப்புவாதம் என்பது அன்னிய ஏகாதிபத்திய நலன்களையும், உள்நாட்டு நிலப் பிரபுக்களின் நலன்களையும் இணைப்பதற்கான ஒரு வெறும் இணைப்புச் சக்தியல்ல. வறுமையால் நலிந்த இலட்சோப இலட்சம் முஸ்லிம் மக்கள் — விசேடமாக இந்துக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் — முஸ்லிம் லீக் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டனர். மதப் பாகுபாடு வர்க்கச் சுரண்டலை மூடிமறைத்துவிட்டதுடன், மிகக் கொடூரமாகச் சுரண்டப்பட்ட கோடிக் கணக்கான முஸ்லிம்களை முஸ்லிம் லீக்குள் விரட்டிவிட்டது. நிலச்சுவான்தார் முறைக்கு எதிராக தீவிர போராட்டத் திட்டமொன்றினை முன்வைத்திருந்தால், இந்த கோடிக்கணக்கான முஸ்லிம்களைத் தேசியத் தலைமையின் கீழ் கொண்டு வந்திருக்கலாம். இதே மாதிரி நகரப் பகுதிகளில் முஸ்லிம் தொழிலாளர்



களுக்கும், முஸ்லிம் நடுத்தர வகுப்பு மக்களுக்கும் சமூக சமத்துவமும், உயர்ந்த வாழ்க்கைத்தரமும் அவர்களின் அபிலாஷைகளின்படி வழங்குவது சம்பந்தமாக தேசியத் தலைமை அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தால், படுமோசமான வகுப்புவாத சொற் சிலம்புகளில் மயங்கி அவர்கள் வகுப்புவாத அரசியற் சேற்றில் சிக்கியிருக்க முடியாது. துரதிஷ்டவசவசமாக, தேசியத் தலைமை நிலப் பிரபுக்களுக்கும் முதலாளித்துவ வர்த்தகர்களுக்கும் தர்மகர்த்தா அந்தஸ்தை ஏற்கனவே வழங்கிவிட்டதுடன், தேசிய சமுதாயத்துள் வர்க்கப்போராட்டக் கொள்கையைச் சகிக்க முடியாத அரசியற் கொள்கையென்று கூறி நிராகரித்துவிட்டது. தேசியசமுதாயத்தைக் கட்டியெழுப்பும் சோஷலிஸ்ட் வேலைத்திட்டம் வெளியே தூக்கியெறியப்பட்டுவிட்டதால், நெருங்கி வந்து கொண்டிருந்த மாபெரும் அழிவைத் தடுக்க எதுவும் செய்ய முடியவில்லை.

1947 ல் இந்தியாவைப் பிரிவினை செய்ததும். இந்திய யூனியனுக்கு வலுமிக்க ஓர் எதிர்ச் சக்தியாக பாகிஸ்தான் என்னும் இஸ்லாமிய அரசை அமைக்கச் செய்த முயற்சியும், தெற்கு ஆசியாவில் தேசிய சமுதாயத்தின் கதியை என்றென்றும் நிர்ணயித்துக் கொண்டிருக்காது என்பது உண்மையே. அமெரிக்காவும் பிரிட்டனும் தலைமை தாங்கும் உலக முதலாளித்துவம் அபிவிருத்தியடையும் இந்தியாவைத் துண்டாடியதை உறுதிப் படுத்தியுள்ளதென்ற காரணத்தால், இப்பிரிவினை ஒரு மாற்ற முடியாத வரலாற்று நடவடிக்கையாக மாறிவிடவில்லை. பாகிஸ்தான் அமைக்கப்பட்ட அடுத்த நாளன்றே, மொழிவாரி மக்கள் பகுதிகளை ஒருங்கிணைக்கும் பிரச்சினைகளும், அவர்களின் அரசாங்கங்களிடையேயும் மக்களிடையேயும் உள்ள பிரச்சினைகளும் தலைதூக்க ஆரம்பித்தன. இரு புதிய அரசுகளிடையே சிறப்பான அண்டை அயலார் நட்பும், சமாதானமும் தழைத்தோங்கும் ஒரு காலகட்டம் தோன்றுவதற்குப் பதிலாக, இந்தப் பிரிவினை இந்தியாவில் வகுப்புவாதப் பகைமையை மேலும் வளர்த்துவிட்டிருப்பதுடன், முன்பு ஓர் உள்நாட்டுப் பிரச்சினையாக மட்டும் இருந்ததை இறைமையுடைய இரு அரசுகளிடையேயுள்ள பிரச்சினையாக மாற்றி, சிக்கலாக்கிவிட்டது. முன்னாள் பிரிட்டிஷ் மாகாணங்களை மொழி அடிப்படையில் மாற்றியமைத்தும், செறிவற்ற நிலப்பிரபுத்துவ அடிப்படையில் மத்திய — ராஜ்ய அரசாங்க உறவுகளை ஏற்படுத்தியும், புதிய இந்திய யூனியனுள் அரசு விரிவாக்கப்பட்டது. பாகிஸ்தானிலோ. அதன் கிழக்குப் பகுதியில் ஓர் இறைமையுள்ள வங்காள தேசம் அமைப்பதற்கு 25 ஆண்டுகள் கூட தேவைப்படவில்லை. மேலும், பிரிட்டிஷ் இந்தியா துண்டாடப்பட்டதின் விளைவாக நேப்பாளம், சிக்கிம், பூட்டான் ஆகிய இராச்சியங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது ஒன்றும் சுலபமாகிவிடவில்லை. இந்திய — பாகிஸ்தான் உறவில் தொடர்ந்து இருந்துவரும் பதட்ட நிலைமை அன்னிய அரசுகள் தலையிட வழி வகுத்திருக்கிறதென்றும், உபகண்டத்தில் உள்நாட்டு உறவுகளிலும், இரு அரசுகளிடையே உறவுகளிலும் கடுஞ் சிக்கலை உருவாக்க உதவியுள்ளது என்றும் கூறலாம்.

மேற்கண்ட விடயங்களைச் சுருக்கிக் கூறின், தெற்கு ஆசிய நாடுகளில் தேசிய சமுதாயங்களைக் கட்டியெழுப்புவதற்கான கொள்கை அமைப்பு கீழ்க்காணும் வரலாற்று பூர்வமான காரணங்களால் உருவாக்கப்படுகிறதென்று கூறலாம்.

(1) இந்திய உபகண்டம் நியாயமான ஒரு புவி இயல் ஒருமையாகக் கருதப்படுகிறது. அத்துடன் அதன் பல்வேறு மக்கள் பகுதியினர் கலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரப் பொதுப் பண்புகளைப் மேற்கொண்டுள்ளனர். இக்கலாசாரத்தின் பண்டைய கற்பனைக் கதைகள் முழுப் பிராந்தியத்தையும் ஒன்றாகத் தழுவி நிற்கின்றன.

(2) ஐரோப்பாவில் நடந்ததைப் போலன்றி, பிரிட்டிஸ் ஏகாதிபத்தியம் இந்தியாவைக் கைப்பற்றியிருக்காவிட்டால், அதன் விளைவாக அது நடத்திய சமூகப் புரட்சி நடந்திராவிட்டால், நவீன பொருளாதாரத்தின் அபிவிருத்தி ஏற்பட்டிருக்க முடியாது. ஆகவே நவீன தேசிய சமுதாயமொன்று தோன்றியிருக்கவும் முடியாது.

(3) பிரிட்டிஷார் இந்தியாவை அரசியல் ரீதியாக ஒருங்கிணைத்தது மட்டுமன்றி, உள்நாட்டில் ஒரு முதலாளித்துவப் பொருளாதாரம் வளர்ச்சி பெறவும், ஒரு தேசியச் சந்தை திடமாக நிலைத்துநிற்கவும் வழி வகுத்தார்கள். அதே சமயத்தில் அவர்கள் ஒரு தேசிய முதலாளித்துவப் புத்திசீவிகள் வர்க்கத்தையும் உருவாக்கினார்கள். இந்த வர்க்கம் சம்பந்தப்பட்ட மொழிவாரி தேசிய இனத்தில் வேரூன்றி இருந்ததெனினும், முழு நாட்டையும் ஒருமையாகவே கருதியது.

(4) இந்தியாவில் முதலாளித்துவ உற்பத்தி வளர்ச்சி பெற ஆரம்பித்த கட்டத்திலிருந்த தொழில் நுட்பமும்; முதலாளிவர்க்கம் உற்பத்தி, வர்த்தகம் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளுடன் ஏற்படுத்திய தொடர்புகளும், தேசியச் சந்தையிலே அன்னிய மூலதனத்தால் தோன்றிய போட்டியின் பயங்கரத்தன்மையும் சேர்ந்து, இந்தியத் தேசிய அரசின் தேசிய எல்லைகளுக்காக வேண்டி மிகவிரிவான பிரதேசத்தைக் கட்டிக் காக்கவேண்டிய தேவையை ஏற்படுத்தின.

(5) முழு இந்தியாவையும் ஆட்சி செலுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு இந்திய முதலாளிவர்க்கம் பலவீனமானதாகும்.

(6) தனித்தனி மொழிவாரி தேசிய இனமோ, நாடு முழுவதிலுமுள்ள மக்களோ மொழி, கலாசாரம், மதம் சாதி ஆகியவற்றைக் கொண்டு மட்டும் திடமாக வலுப்பெற முடியாது. தேசிய சமுதாயம் வலுப்பெற்று உறுதியாக விளங்க வேண்டுமானால், உற்பத்தி செயல் முறைக்குள்ள உறவுகளை அடிப்படையாகக் கொண்ட பொதுப் பொருளாதார நலன்களின் ஒரு புதிய பரிமாணம் அத்தியாவசியமாகும். பூர்ஷுவா தேசிய சமுதாயம் திடமாக நிலைபெறுவதற்குச் சோஷலிஸ்ட் வேலைத்திட்டமொன்று தேவைப்படுகிறது.

---



# மோசமடைந்து வரும்

# உலகப் பொருளாதார நெருக்கடியில் இலங்கையின் முன்னேற்றப் பாதை

## (கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா)

இலங்கையின் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. அது குறிப்பாக உலகப் பொருளாதாரத்தின் முதலாளித்துவத் துறையுடன் பரந்தும், நெருங்கியும் பிணைக்கப் பட்டுள்ளது. இந்த விடயத்தை, தற்போதைய எங்கள் நோக்கங்களுக்கு, ஒரு சில புள்ளி விபரங்கள் போதியளவு விளக்கிக் காட்டுவதோடு தெளிவு படுத்தவும் செய்யும்

1973 ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதிகள் 250.22 கோடி ரூபா யென மதிப்பிடப்பட்டது. இத்தொகையில் 49.85 கோடி ரூபா அதாவது 20 சதவீதமட்டுமே சோஷலிஸ்ட் நாடுகளுக்குச் செய்யப்பட்ட ஏற்றுமதிகளாகும். மிகுதியான 80 சதவீதமான 200.32 கோடி ரூபா முதலாளித்துவ நாடுகளுக்குச் சென்றது.

இறக்குமதியைப் பொறுத்த வரையில் நிலைமை வேறுபடவில்லை. 1973 ஆம் ஆண்டு செய்யப்பட்ட 269.35 கோடி ரூபா பெறுமதியான இறக்குமதியில் 36.02 கோடி ரூபா, அதாவது 14 சதவீதமட்டுமே சோஷலிஸ்ட் நாடுகளிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதியாகும். மிகுதியான 233.33 கோடி ரூபா பெறுமதியான, அதாவது 86சத வீதமான இறக்குமதிகள் முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றும் நாடுகளிலிருந்து வந்தன.

1973ல் வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட 519.57 கோடி ரூபாவில் 85.87 கோடி அதாவது 16 சதவீதமட்டுமே உலகப் பொருளாதாரத்தின் சோஷலிஸ்ட் துறையுடன் ஈடுபடுத்தப்பட்டதாகும். 433.7 கோடி ரூபா பெறுமதியுடையதென மதிப்பிடப்பட்ட 86 சதவீதம் வர்த்தகம் உலகப் பொருளாதாரத்தின் முதலாளித்துவத் துறையுடன் செய்யப்பட்டதாகும்.

சோஷலிஸ்ட் நாடுகளுடன் வியாபாரம் செய்யப்படும் பொருட்களின் விலை நிர்ணயம் முதலாளித்துவ உலகச் சந்தையில் நிலவும் நிலைகளினால் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை நாம் கருத்திற் கொள்வோமாயின், இதுவே, உலகப் பொருளாதாரத்தின் முதலாளித்துவத் துறையுடன் இலங்கையின் வெளிநாட்டுவர்த்தகம்முற்றாகஇணைக்கப்பட்டுள்ளதென்பதை மேற்கண்ட புள்ளி விபரங்களைவிடத் தெளிவாகக் காட்டுகின்றது. உதாரணமாக, எங்களுக்குப் பெருமதிப்பு வாய்ந்த அரிசி - இறப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கையின் கீழ் நாம் சீனுவுக்கு வழங்கும் இறப்பரின் விலை சிங்கப்பூர்ச் சந்தையில் நிலவும் விலைகளின் மாதாந்த சராசரிகளினுல் தீர்மானிக்கப்படுகின்றது. மேலும் சோவியத் யூனியன் தனக்குத் தேவையான தேயிலையை இலங்கையிடமிருந்து கொழும்புல் நடைபெறும் ஏலத்தில் வாங்குவதன் காரணமாக அந்நாட்டிற்கான எங்கள் தேயிலையின் விலை கொழும்பில் நடைபெறும் ஏலத்தில் தீர்மானிக்கப்படுகின்றது.

முதலாளித்துவ சந்தையூடாக முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்துடன் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் இணைக்கப் பட்டுள்ளமையினுல், இலங்கை அந்நாடுகளைச் சார்ந்து வாழ வேண்டியிருந்தது. அதுவும் வெகுவாகவும் முக்கியமாகவும் முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்துடன் சார்ந்து இருக்க வேண்டியிருந்தது. இலங்கையின் தேசியப் பொருளாதாரத் தொழிற்பாட்டுடன் வெளிநாட்டு வர்த்தகம் வகிக்கும் இடத்தை நாம் ஆராயும்போது இது தெளிவாகும். மீண்டும் சில புள்ளி விவரங்களைக் கவனிப்போம்.

நாம் இப்போது சிறப்பாக, இலங்கையின் பெருந் தோட்டத் துறையைக் கவனிப்போம். உற்பத்தியின் 60 சதவிகிதம் உள்நாட்டிலேயே பாவிக்கப்படும் தென்னந் தோட்டங்களைத் தவிர ஏனைய பெருந்தோட்டங்கள் பெரிதும் ஏற்றுமதியை நோக்கியமைக்கப்பட்டுள்ளன. நான் உதாரணங் கூறப்போகும் புள்ளி விவரங்கள் நான் குறிப்பிடக் கருதாத மட்டுப்பாடுகளை விளக்குவதாக அமைந்தாலும் அவை சிறந்த விளக்கம் அளிப்பனவாக அமையும்.

1973 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மொத்த தேசியப் பொருளாக்கம், மாறு (1959) ஆக்கச் செலவு அடிப்படையில், ரூ.103,820 இலட்சங்களாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த மொத்தத்துள், கமத்தொழில், காட்டியல், வேட்டையாடல், மீன்பிடித்தல் ஆகியன 338.74 கோடியாக அல்லது 32 சதவீதமாக அமைந்தன. இந்த 338.74 கோடியுள் தேயிலை, றப்பர், தெங்கு சிறு ஏற்றுமதிகள் ஆகியன அவற்றின் பதனிடப்படல் உட்பட 188.55 கோடியாக இருந்தன. வேறு சொற்களில் கூறின், ஏற்றுமதிக் கமத்தொழிற்றுறை இந்தத் தொகையுள் கமத்தொழில் காட்டியல், வேட்டையாடல், மீன்பிடித்தல் ஆகியவற்றிற்கு, 42.3 வீதத்தையும் மொத்தத் தேசியப் பொருளாதாரத்தில் 18.12 வீதத்தையும் அளித்தது. மொத்தத் தேசியப் பொருளாக்கம் எவ்வாறு கணிக்கப்படுகின்றதென்பதை நாம் நினைவு கூறும்போது, எங்கள் பொருளாதாரத்தில் கமத்தொழில் உற்பத்தி வகிக்கும் பெருமிடத்தையும் அதனுள் ஏற்றுமதிக் கமத்தொழில் வகிக்கும் பெரும் பகுதியும் உணரலாம். நாம் நமது விவசாயத் தொழிற்பாட்டில், அதிலும், சிறப்பாக ஏற்றுமதி விவசாயத்தில் பெரிதும் தங்கியுள்ளோம் என்பது உண்மையே.

தேயிலை, இறப்பர், தெங்கு ஏற்றுமதிகளை மட்டும் நாம் கருத்திற் கொள்ளும்போது 1973ஆம் ஆண்டுக்கான 199.22 கோடி ரூபா பெறுமதியான ஏற்றுமதியில் 42.36 கோடி ரூபா அல்லது ஏறத்தாழ 20 சதவீத மட்டுமே சோஷலிஸ்ட் நாடுகளுக்குச் செய்யப்பட்ட ஏற்றுமதிகளைக் குறித்தது. 80 சதவீதம் முதலாளித்துவ நாடுகளுக்குச் செய்யப்பட்ட ஏற்றுமதியைக் குறித்தது. எமது நாட்டு ஏற்றுமதி விவசாயம் முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தின் தொழிற்பாட்டில் எவ்வளவு தூரம் தங்கியுள்ளது என்பதைக் காட்டுவதற்கு இது போதுமானதாகும்.



நாம் இனி இறக்குமதி நிலையை நோக்குவோம். இங்கு இறக்குமதிகளின் உள்ளடக்கம் முக்கியத்துவம் பெறுகின்றது. 1973 ஆம் ஆண்டுக்கான சீராக்கப்பட்ட சுங்கத் தரவின் பிரகாரம் இலங்கையின் மொத்த இறக்குமதி 286.5 கோடியென மதிப்பிடப்பட்டது. இத்தொகையுள் 155.5 கோடி அல்லது 56.2 சதவீதம் நுகர்பொருட்களின் இறக்குமதியில் செலவிடப்பட்டன. இந்த 155.5 கோடியில் 137.9 கோடி உணவு. குடிநீர்ப்பானத்தில் செலவிடப்பட்டது. இத்தொகை அரிசிக்கு 32.2 கோடியையும், மாவிற்கு 45.8 கோடியையும், சீனிக்கு 33.4 கோடியையும்பால், பாலுணவுப்பொருட்களுக்கு 7.1 கோடியையும் புடவைக்கு 5.5 கோடியையும் உள்ளடக்கியது. 118.5 கோடி மட்டுமே இடைப்பருவ முதலீட்டுப் பொருட்கள் மீது செலவிடப்பட்டன.

அரிசி, மா, சீனி ஆகியவற்றின் இறக்குமதிகள் மீது செலவிடப்பட்ட 111.9 கோடியுள் 17.747 கோடி அல்லது 16 சதவீதமட்டுமே சோஷலிஸ்ட் நாடுகளுக்குச் சென்றது. 276.5 கோடி இறக்குமதியில் 39.33 கோடி அல்லது 14 சதவீதம் மட்டுமே சோஷலிஸ்ட் நாடுகளிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதிகளைக் குறித்தன. நமது அடிப்படைத் தேவைகளைப் பெற நாம் முதலாளித்துவ உலகச் சந்தை மீது முற்றுகத் தங்கியிருப்பதும், அதேபோன்று எமது ஏனைய இறக்குமதிகளுக்கும் அந்தச் சந்தையிலேயே தங்கியிருப்பதும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களினுல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.

சுதந்திர இலங்கையின் தேசியப் பொருளாதார நிலை இப்போது ஐயத்திற்கிடமின்றித் தெளிவாக உள்ளது. இலங்கையின் பொருளாதாரம் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரமாகும். அது முதலாளித்துவ உலகச் சந்தையின் அமைப்புக்குள்ளயே பெரிதும் தொழிற்படுகின்றது. உலக முதலாளித்துவ நாடுகள் இலங்கையின் அதிமுக்கிய வெளிநாட்டு வர்த்தகத்திலும், அதன்மூலம் இலங்கையின் தேசியப் பொருளாதாரத்தின் மீதும் பலம்வாய்ந்த பிடியைப் பெற்றுள்ளன. இலங்கைப் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்தின் மீது தங்கிவாழும் பொருளாதாரமாகவுள்ளது.

தங்கிவாழுதலை இருவகைக் கருத்துப்பட நாம் ஆராய்வோமாக. முதலாவது கருத்தின்படி தங்கிவாழும் நம்நாட்டுப் பொருளாதாரத்தின் தொழிற்பாடு முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தின் தொழிற்பாட்டில் தங்கியிருப்பதாகும். முதலாளித்துவ உலகச் சந்தை மூலம் இலங்கைப் பொருளாதாரம் முதலாலித்துவ உலகப்பொருளாதாரத்துடன் அத்தகைய நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, சார்ந்து வாழுதல் சுரண்டல் என்ற கருத்தில் பயன்படுத்தப்படும். இத்தொடர்பினுல் வெளிநாட்டு வர்த்தகத்தின் வழிமூலம் இலங்கையின் பொருளாதாரம் முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தின் சுரண்டப்படும் ஒரு பகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த விடயத்தை இங்கு விரிவாக விளக்க வேண்டியுள்ளது. முதலாளித்துவ உலகச்சந்தை, முதலாளித்துவ அதாவது உலக முதலாளித்துவச் சட்ட விதிகளின் பிரகாரம் தொழிற்படுகின்றதென்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். முதலாளித்துவம் ஒரு உலக அமைப்பு முறையாக விரிவடைந்து வருவதை வெளிக்காட்டுமுகமாக முத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாளித்துவ உலகச்சந்தை உருவாகியது. முதலாளித்துவ வர்த்தகம் விரிந்து, பரந்து சர்வதேச உலக வர்த்தமாக அமைப்பும் உருவமும் பெற்றது. எனினும், முதலாளித்துவ வர்த்தகம் முதலாளித்துவ முறையாகப் பரவும்போது தனது குணவியல்புகளை மாற்றவில்லை. தனது குணவியல்புகளை மாற்றுவதற்கு மாறாக முதலாளித்துவ வர்த்தகம் தனது அடிப்படைக் குணவியல்பான சுரண்டல் குணவியல்புக்கு முதன்மையளித்தது. ஏனெனில், முதலாளித்துவ உலக வர்த்தகம் முதலாளித்துவ உலகச் சுரண்டலின் ஒரு கருவியாகும்.

இத்தொடர்பின் சுரண்டற் தன்மை குடியேற்ற நாட்டுப் பொருளாதாரத்தில் தெளிவாகக் காணப்பட்டதோடு, தற்போது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரத்திலும் - இலங்கையும் அதிலொன்று - காணப்படுகின்றது. சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் எமது நாட்டின் மீது வெளிநாட்டவரின் சுரண்டல் நேரடி முதலீடுகளைச் செய்வதன் மூலமல்லாது வர்த்தக மூலமே செயற்படுத்தப்பட்டுவந்தது. பெருந்தோட்டத் துறை தொடர்பாக, மீள முதலீட்டைக் கருத்திற்கெடுத்துக்கொண்ட போதிலும், மூலதனம் வெளிநோக்கிச் சென்று கொண்டிருந்ததேயன்றி உள்நோக்கி வரவில்லை. சுதந்திரம் பெறுதற்கு பிந்திய காலப் பகுதியில் பெருந்தோட்டத்து மூலதனம் வெளியேறிக் கொண்டிருந்தது. தோட்டத் தொழிலில் முதலீடு செய்யப்பட்ட மூலதனம் மானியமாகப் பொதுமக்கள் நிதியிலிருந்தே பெரிதும் பெறப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரம் உலக முதலாளித்துவத்தில் தங்கியிருக்கும் பொருளாதாரம் என்ற எனது விடயத்திலிருந்து விலகிச் சென்றுள்ளேன். அது உலக முதலாளித்துவத்திற்குக் கட்டுப்பட்டதோடு, வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த விரிவுரை விடயமாக முதலாளித்துவ உலகப் பொருளாதாரம் தற்போது தொழிற்படும் முறையினைப் பற்றி ஆராய்வது அவசியமாகின்றது.

இங்கு, பிரதான அம்சங்கள் விரித்துரைக்கப்படலாம். உலக முதலாளித்துவப் பொருளாதாரம் பிரதான நெருக்கடி நிலையை நோக்கியுள்ளதென்பதில் கருத்து வேற்றுமை இல்லை. இந்த விடயத்தில் ஏகோபித்த கருத்துடன்பாடு நிலவுகின்றது. இந்த நெருக்கடிக்கான காரணம் அல்லது காரணங்கள் பற்றியும் அதிலிருந்து மீளும் வழி பற்றியுமே கருத்து வேறுபாடு நிலவுகின்றது.

இந்த விடயங்கள் மீது மார்க்சீயவாதி என்ற ரீதியிலேயே நான் பேசுகின்றேன். மார்க்சீயவாதிகளாகிய நாம் நெருக்கடி நிலை - தவிர்க்க முடியாத பருவ கால நெருக்கடி - முதலாளித்துவ முறையிலும் அதன் தொழிற்பாட்டிலும் இயல்பாய் அமையப் பெற்ற அம்சமாகும் என்ற கருத்துடையவர்களாவோம். மகாயுத்தத்திற்கு பிந்திய காலத்திற்குரிய கீனஸ்வாதிகள் முதலாளித்துவத்தைப் பின்னடையச் செய்த நெருக்கடிகளைத் தடுத்து வைக்கவும், அதன் அமைப்பு முறையிலிருந்து நெருக்கடிகளை வெளியேற்றவும் வழி கண்டு பிடித்துள்ளனர். எனக்கோருகின்ற போதிலும், நாம் இக்கருத்தை தொடர்ந்தும் கடைப்பிடித்துள்ளோம். புதிய கருத்தைப் பின்பற்றுபவர்களின் இந்த நம்பிக்கையை விளக்கவே ''பின்னடைவு' என்ற பதம் ''மந்தம்'' என்ற பழைய பதத்திற்குப் பதிலாக



பயன்படுத்தப்பட்டதோடு அது பிரபல்யமும் பெற்றது. முதலாளித்துவ முறையானது தடையின்றி முன்னேறி அபிவிருத்தியடையும் போக்கில் அதன் தொழிற்பாட்டில் வேகமாகச் செல்லும் நோக்குடன், ஒரு வேளை முன் மெதுவாகச் செல்லக் கூடுமாயினும், அது இந்நூற்றாண்டின் 30 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தது போல் முதலாளித்துவம் ஒருபோதும் முறிந்து போகாது என்ற கருத்தை வெளிப்படுத்தவே இப்பதம் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டது.

வாதிடும் சிறப்பறிஞர் குழாம்களின் முரண்படும் ஆலோசனைகளை முட்டாள்தனமாக அரசியல்வாதிகள் கேட்க மறுத்தாலன்றி மந்த நிலை ஒரு போதும் ஏற்படாது. முரண்பட்ட ஆலோசனைகளின் குழப்பத்தின் மத்தியில் இந்த அரசசியல்வாதிகள் பெரும் பாலும் கேட்க மறுக்கத்தான் செய்தனர்.

முதலாளித்து முறையின் தொழிற்பாட்டில் தவிர்க்க முடியாத பருவ நெருக்கடிகள் நிலையாக அமைப்பெற்றுள்ளன என்ற முடிவுக்கு மார்க்சுய மார்க்சீயவாவாதிகளும் காட்டும் காரணங்களுக்கு அவர்கள் எவ்வாறு வந்தார்கள் அல்லது வருகிறார்கள் என்பதை இங்கு ஆராயவேண்டிய அவசியமில்லை.

முதலாளித்துவத்தின் நோக்கம் தனிப்பட்ட இலாபத்தை உண்டுபண்ணுவது, முதலாளித்துவம் அதன் நெடுங்காலத் தொழிற்பாட்டில் குறைந்து வரும் இலாபவீதத்துடன் பீடிக்கப்பட்டுள்ளதென்பதையும் அடிப்படையாகக் கொண்டே மேற்குறித்த காரணம் காட்டப்படுகின்றதென்பதை மட்டும் இங்கு காட்டினால் போதுமானதாகும். புதியதொரு செழிப்பு சகடவோட்டம் நடைபெறச் செய்வதற்கும் எஞ்சிய முதலீட்டை இலாபகரமாக ஆக்குவதற்கும் முழுப் காலப்பகுதியினதும் முதலீடும் அழிக்கப்பட வேண்டிச் செய்கின்றது இந்த குறைந்து வரும் இலாபவீதம். மேலும் ஒரு பக்கத்தில் இந்த முதலாளித்துவம் உலகச் பொருளாதாரம் ஒன்றை உருவாக்கியபோது முழு உலகமும் நான் முன்னர் குறிப்பிட்ட அழிவை நோக்கியுள்ள தலை தடுமாற்றமான இந்தப் பொருளாதார சகடவோட்டத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டது. மறு பக்கத்தில் இந்தச் சகடவோட்டத்தின் நேரடியாகத் தொடர்பு கொள்ளாது பிரிந்து வேறுபட்டு நிற்கும் துறையான பொதுவுடைமைத் துறை, உலகப்பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியாகதற்போதுள்ளது. இத்துறை வேறு அடிப்படையைக் கொண்டு முன்நோக்கிச் சென்று விருத்தியடைகின்றது. நான் இங்கு ஆராய வேண்டிய விடயம் நெடுங்காலமாக நிலவும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கருத்து வேற்றுமைகள் அல்ல. இந்த விரிவுரையின் இக்கட்டத்தில் நாம் செய்ய வேண்டியது யாதெனில் முதலாளித்துவ உலகத்தை நெருக்கும் பொருளாதார நெருக்கடியின் சில அம்சங்களை அவதானிப்பதேயாகும்.

முதலாளித்துவத்தின் புதிய நெருக்கடியின் மிக ஆணித்தரமாக அமைந்துள்ள அம்சம் மிகைப் பணவீக்கமும். விரைவாக வளர்ந்து வரும் பெருமளவிலான வேலை இல்லாப் பிரச்சினையும் ஒன்று சேர்ந்துள்ளமையாகும். பணவீக்க நிலையில் விரைவாக வளர்ந்து வரும் வேலையின்மை, பொருளாதாரத் தேக்கத்தின் அல்லது பின்னடைவின் அல்லது மந்தத்தின், அல்லது வேறு எவ்வாறு குறிப்பிட்டாலும், அதனின் அறிகுறியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய நிலையை தொகுக்கவோ வர்ணிக்கவோ புதிய பதம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தேக்கம் பணவீக்கம் என்பதே இப்பதமாகும். இது பொருளாதாரத் தேக்கமும் பணவீக்கமும் கூடியிருக்கும் நிலையைக் குறிக்கின்றது.

தற்போது நிலவும் நெருக்கடியின் வேறு சில அம்சங்களும் உள்ளன. அவற்றை இங்கு குறிப்பிடுவது பயனுள்ளதாய் அமையும். உதாரணமாக முதலாளித்துவ உலக நிதி அமைப்பு முறையில் நிலை குலைவுக்கு வழியமைக்கும் பெரும் குழப்பமும் நிலவுகின்றது. இந்த முதலாளித்துவ உலக நிதி அமைப்பு முறையில் பல வகை மிதக்கும் வெளிநாட்டு நாணயங்கள், கொந்தளிக்கும் கடல்போன்ற முதலாளித்துவ நிதியில் முன் அறிந்து கூறமுடியாச் சுழி, புயல் அலைகள் மத்தியில் மிதக்கின்றன. இந்நிலை பொதுவுடைமைத் துறையில் நிலவும் நிலைக்குச் நேர் எதிர்மாறானதாகும். தேக்கப் பணவீக்கத்தின் புதிய அம்சத்தைக் கருத்திற்கொண்டு அதன் காரணங்கள் பற்றியும், கருத்துப்பற்றியும் திடமாக்கிக்கொள்வது அவசியமானதாகும்.

பொருளாதாரம் அபிவிருத்திபடையவும், விசாலிப்படையவும் ஓரளவு பணவீக்கம் நிலவுவது தேவையான ஒரு புறத் தூண்டல் என்ற கருத்தையும், அத்தகைய பணவீக்கத்தை ஏற்ற எல்லைக்குள் வைத்திருப்பதற்கான கருவிகளைத் தற்கால முதலாளித்துவம் உருவாக்கியதென்ற கருத்தையும் மறுத்துரைக்கும் இந்த புதிய குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியை விளங்கிக் கொள்வதற்கு மாக்சிஸம் மட்டுமே திறவுகோலாக அமைந்துள்ளதென்பது எனது கருத்தாகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கருவிகளுள் ஒன்று வேலையில்லாதவர்களின் தொகையும், வீசமும் அதிகரிப்பாகும். இங்கு அதிகரித்து வரும் வேலையின்மை, விரைவாக உயர்ந்தும் கட்டுப்படுத்த முடியாததுமான பணவீக்கம் ஆகிய இரு நிலைகள் உள்ளன. இதனை மிகைப்பான பணவீக்கமென ஏலவே வருணிக்கப்பட வேண்டியதாயிற்று. அது எவ்வாறு எழுந்தது–

இதற்கான விடை உலக மகாயுத்தத்தின் பின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் எழுந்த முதலாளித்துவத்தின் அரசியல் நோக்குக்கொண்ட கொள்கைகளில் காணப்படுகிறதென்பது எனது கருத்தாகும்.

பெவரிஜ் போன்ற மனிதர்களின் செல்வாக்கின் கீழ் மகாயுத்தத்திற்குப் பின் ''பெருமளவிலான வேலையளித்தல்'' என்ற கொள்கையை உணர்ந்தே மேற்கொண்டனர். ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளும் இக்கருத்தைச் செயற்படுத்தின.

இக்கொள்கையை மேற்கொல்வதற்கான மூல காரணம் யுத்தத்திற்கு முன் பிரித்தானிய மக்கள் பெற்ற கசப்பான அனுபவத்தினால் இனி மேல் ஒரு போதும் பெருமளவிலான வேலையின்மையை அனுமதிக்கவோ சகிக்கவோ மாட்டார்கள் என்பதனாலாகும். இக்கொள்கை அரசியல் நோக்கில் அமைக்கப்பட்டதாகும். எனினும், பெருமளவில் வேலையளித்தல் முதலாளித்துவ நோக்கமாக இருக்காது என்பது சாதாரண உண்மையாகும். முதலாளித்துவம் தனியார் இலாபத்தை உருவாக்குதலும், ஆகக் கூடியளவு பெறுதலும், என்ற அதனது பிரதான நோக்கை அடையத் திறம்படத் தொழிற்பட வேண்டுமாயின், தேவையானபோது பெறவும் பின்னர் அப்புறப்படுத்தவும் கூடிய, மாக்ஸ் அழைத்த ''தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள தொழிலாளர் குழாம்'' ஒன்று தேவைப்படும். பெருமளவிலான வேலையளிப்புக் கொள்கை முதலாளித்துவ நிலைகளில் முறையாக மேற்கொள்ளப்படின் இத்தொழிலாளர் குழாமை வெறுமையாக்கச் செய்வதோடு அதன் விளைவாக அம்முறையின் தொழிற்பாட்டையே பேரிடருக்குள்ளாக்கத் தக்கதாகவும் கேடாகவும் பாதிக்கும்.



சமுதாய ரீதியாகப் பார்க்கும்போது, இத்தொழிலாளர் குழாம் இல்லாதிருப்பின் அல்லது அது வலுவாகக் குறைக்கப்படின் வேதனத் தொழிலாளர் முதலாளியிலும் பார்க்க சாதகமான நிலையில் அமர்த்தப்படுவர் என்பது தெளிவாகக் காணக்கூடியதாகவிருக்கும். வேதனத் தொழிலாளர் தங்களது நிலைமையை உணர்ந்து அந்நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதும், முதலாளித்துவ உடமையாளர் தனியார் இலாபத்தின் அளவையும் வீதத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு வேதனத்திற்கென அதிகரிக்கப்பட்ட செலவைத் தனது பொருளை நுகர்வோர் மீது சுமத்திவிடுவதன் மூலமே இந்நிலைமையைச் சமாளிப்பார். பணவீகத்தின் இந்த நிலைமை குறுக்கிட்டுத் தடுக்கப்படாவிடின், அது மிகைப் பணவீக்கக் கட்டத்தை அடையும். இந்த வளர்ச்சி முறையும் நாணயம் நிலை குலையாமல் கால வரையறையின்றித் தொடர்ந்து செல்ல முடியாது. இந்த வளர்ச்சி முறை நின்றதும் அல்லது அதன் வேகத்தைக் குறைத்ததும், அல்லது பளுவைத் தாங்க முடியாது நாணய, நிதி முறை முறிவுகண்டதும் இலாபம் பெறுதலும் இலாப உற்பத்தியும் பெற முடியாத காரியமாவதோடு முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வேகம் குறைந்து மந்த நிலைமை அடையும். இதனால் தேக்கப் பண வீக்கம் ஏற்படும்.

இதனின்றும் தப்பி வெளியேறுவதற்கு முதலாளித்துவ முறைக்கு ஒரு வழி மட்டுமேயுள்ளது. முதலாளித்துவ முறை தேவையான தயார்நிலைத் தொழிலாளர் குழாமை மீள உருவாக்குதல் வேண்டும். அதாவது பெருமளவில் வேலையின்மையை உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்தல் இன்று அரசியல் பொருள் கொண்டதாக விருப்பதால், ஆகக்கூடிய ஆதிக்கம்பெற்ற வகுப்பினர் தன்னும் முதலாளித்துவ பொருளாதாரத் தேவையின் அடிப்படையில் செயற்படத் துணியார். அது தணிப்பு நடவடிக்கைகள், ஏய்ப்பு நடவடிக்கைகள், இணக்க நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவையாவும் நெருக்கடி நிலையை மோசமாக்குவதோடு, அரசியல் எதிர்ப்பு நிலையை உருவாக்கும். முற்போக்கு முதலாளித்துவ நாடுகள் அதிகாரம் பெறுவதன் நோக்குடன் அரசியல் போராட்டம் எதுவுமின்றி உடன்பட்டு வருவார்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். இன்றைய நிலையில் இந்த நெருக்கடிக்கு அரசியல் தீர்வு ஒன்றே காணப்படலாம். அதிகாரத்திலுள்ள தொழிலாளர் வகுப்பு, முதலாளித்துவத்தை அழித்து பொது உடமையை அமைக்க முயற்சித்தல் வேண்டும். அதிகாரத்திலுள்ள முதலாளித்துவ வகுப்பினர் தங்களை நோக்கியுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பாசிசத்தைத்தான் நாடவேண்டும். அதனைத் தான்அவர்களும் நாடுவர்.

நான் இனி எனது விடயத்திற்கு வருகின்றேன். இலங்கைப் பொருளாதாரத்தில் உலக முதலாளித்துவ நெருக்கடியின் தாக்கத்தை, அதாவது அபிவிருத்திபடைந்த முதலாளித்துவ நாடுகளில் பரவும் பொருளாதார மந்தத்தின் பொருளாதார விளைவை ஆராய்ந்து மதிப்பிடுவதே இந்த விரிவுரையின் அடிப்படை நோக்காகும். இலங்கை முதலாளித்துவ உலகச் சந்தையினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தினதும் அமைப்புக்குள் ஒரு முதலாளித்துவ நாடாக இலங்கை தொடர்ந்துமிருந்தால், இலங்கை நீர்ச்சுழலில் தலை தடுமாறிச் சிக்கிவிடும். இந்த விரிவுரையின் ஆரம்பப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைப் பொருளாதாரத்தின் நிலையினாலேயே இது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆதலால், தற்போது எழும் கேள்வி யாதெனில், இந்த நீர்ச் சுழலில் இருந்து மீளவோ, அதன் தாக்கத்தைக் குறைக்கவோ இலங்கையால் எதுவும் செய்ய முடியுமா என்பதும், அவ்வாறு செய்ய முடியுமாயின் என்ன செய்யவேண்டுமென்பதுமேயாகும்.

முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தின் பரவும் நெருக்கடியின் தாக்கம் ஏலவே இலங்கையில் உணரத் தொடங்கியிருக்கின்றதென்பதை நாம் முதலில் கருத்திற்கொள்வோமாக. இந்த நெருக்கடியானது உலக மோட்டார் வாகன தொழிற்சாலையினது ஒரு பகுதியின் வீழ்ச்சியை உண்டு பண்ணியுள்ளது. உலகில் பல்லாயிரக்கணக்கான மோட்டார் வாகனங்கள் விற்கப்படாமல் அவற்றின் உற்பத்தியாளர்களிடம் விற்பனையாளர்களிடமும் இருக்கின்றன. இருப்பாக இருக்கும் இந்தப் பொருள்கள் விற்கப்படும் வாய்ப்பு அரிதாகையால் அவற்றினை முதலில் விற்பனை செய்யும் வரையில் பல்வேறு நாடுகளினது மோட்டார் வாகனத் தொழிற்சாலையின் முழுப்பிரிவுகளும் உள்ளபடியாகவே மூடப்பட்டுள்ளன. இதன் தவிர்க்கமுடியாத விளைவு புதிய டயர்களின் தேவை குறைவடைவதாகும். மேலும் பெற்ரேல் விலை அதிகரித்தன் காரணமாக மக்கள் தங்களது மோட்டார் வாகனங்களைக் குறைவாகப் பாவிப்பதனால் டயர்களின் ஆயுள் பாவனை கூடி, புதிய டயர்களின் தேவை குறைக்கப்படுகின்றது. மோட்டார் டயர் உற்பத்தியாளர்களே உலகில் ஆகக் கூடுதலாக இறப்பர் பயன்படுத்துவராவர். இந் நிலையின் விளைவாக செப்பமற்ற இறப்பரின் விலை குறைக்கப்பட்டு, கடந்த வரவு செலவுத் திட்டத்தில் இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாத செய்யப்பட்ட ஆர். எஸ். எஸ். இலக்கம் 1 இன் விலையான 95 சதத்திலும் பார்க்க குறைவாகக் குறைக்கப்பட்டது.

இதே போன்ற தாக்கம் தெங்கிலும் காணப்படுகின்றது. உலகச் சந்தையில் தேங்காய் எண்ணெயின் விலை தொன் ஒன்றுக்கு 600 பவுணிலிருந்து 325 பவுணுக்கு குறைந்துள்ளது.

1972 ஆம் ஆண்டில் விளைந்தது போல் 1975 ஆம் ஆண்டிலும் விளைச்சலிருக்குமென அமெரிக்க அறிஞர்கள் சாத்திரம் கூறுகிறார்கள். முதலாளித்துவப் பொருளாதாரத்தில் கைத்தொழில் நெருக்கடி தெங்குப் பொருள் விலையில் என்ன விளைவை ஏற்படுத்தும் என்பது பற்றி முற்கூட்டியே கூறுவது நன்றல்ல. ஆனால் கூடிய விளைச்சலில் குறைந்த பணம் மட்டுமே கிடைக்கும் போலுள்ளது.

ஏனைய ஏற்றுமதிப் பொருட்கள் பற்றி நான் விரிவாக விளக்கமாட்டேன். ஆனால் வேறுபட்ட விடயமான தேயிலை பற்றிக் குறிப்பிடுகின்றேன். தேயிலை நமது ஏற்றுமதியில் பெருமுயற்சியாகவுள்ளதென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அது எமது அந்நியச் செலாவணி உழைப்பில் 55 தொடக்கம் 60 வீதத்தை வழங்குகின்றது. இப்பொருள் உலகில் இன்று குறைவாகக் காணப்படுவதால் இவ்வருடம் அவற்றின் விலைகள் மிகவும் உயர்ந்துள்ளன. மேலும் தேயிலை மலிவான பொருளாக இருப்ப



தால் கஷ்டமான காலங்களிலும் அதன் சந்தை பெருகும். அதாவது சிறப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளின் பெரும்பகுதியான மக்கள் தேநீரைக் குடிபானமாகப் பாவிக்கத் தொடங்கினர். வருங் காலத்திலும் இச்சந்தை முழுவதும் இருக்கப் பெற, அவற்றின் அமைப்பு மாற்றப்படலாம். சந்தைகள் மாற்றமடைந்து கொண்டு செல்ல அவற்றினைத் தேயிலை உற்பத்தியாளர்கள் தத்தம் விருப்பப்படி பின்தொடர்ந்து செல்வதை அனுமதிக்கலாமா? இவ்விடயத்தை நான் பின்னர் ஆராய்வேன்.

இவையாவும் முதலாளித்துவ உலக நெருக்கடியின் ஆரம்பத் தாக்கத்தைப் பொறுத்தனவாகும். நெருக்கடி வலுவடையும் போது என்ன நிலையாகும். இந்நிலைக்கு நாம் சரணடையாமல் முன்னர்போல் செல்லலாகாதென்பது தெளிவாகும்.

இந்த சுரண்டல் பிடியிலிருந்து விடுபடுவதே நீண்டகால முயற்சியாகும். அவ்வாறு செய்தல் இலங்கையில் பொதுவுடைமைப் பொருளாதாரத்தை அமைப்பதற்கான வழிமுறையின் ஒரு பகுதியாய் அமையும். எனினும் எமது உடனடியான முயற்சி யாதெனில் முதலாளித்துவ உலக நெருக்கடியின் தாக்கத்தை எதிர் நோக்கும் பொருட்டு எமது பொருளாதாரத்தை ஆயத்தம் செய்வதாகும். முதலாளித்துவ உலகச் சந்தையிலிருந்தும் அதன் சுரண்டல் தன்மையான தொடர்பிலிருந்தும் நாம் பிரிந்து செல்ல முயற்சிக்கும் வேளையில், அச்சந்தையிலேயே கூடுதலான திறமையுடன் போட்டியிட நாம் எம்மை விரைவாகத் தயார் செய்து கொள்ளுதல் வேண்டும். இத்தகைய முயற்சி எமது திறனுக்கு அப்பாற்பட்டதல்ல.

பிரதான விடயமான தேயிலைத் தொழிற்சாலையை உதாரணமாக எடுங்கள். தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இலங்கையே கூடுதலாக ஏற்றுமதி செய்கின்றது. எனினும், இத்தேயிலை சுய இலாபம் பெறும் நோக்குடைய சொந்தக்காரர்களால் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு ஏற்றுமதியாளர்களினால் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. காணிச் சீர்திருத்தத்திற்குப் பின்னர் அரசாங்கத் துறையில் 1,20,000 ஏக்கர் தேயிலையும், கம்பனிகளின் உடமையான தோட்டங்களாக தனியார் துறையில் 4,20,000 ஏக்கரும் உள்ளன. கம்பனியின் உடமையான தேயிலைச் சொத்துக்களுள் 1,60,000 ஏக்கர் வெளிநாட்டவர்களின் உடமையாகும். ஒவ்வொரு கம்பனி அல்லது கம்பனிகளின் கூட்டு முதலாளித்துவ கம்பெனி யாதலின் அவை ஒவ்வொன்றும் சுய இலாபம் பெறும் நோக்குடன் உற்பத்தியையும் விற்பனையையும் தாங்களே மேற்கொள்கின்றன. இதன் விளைவாக உலகின் ஆகக் கூடுதலான தேயிலை ஏற்றுமதி நாடாக இலங்கை விளங்குகின்ற போதிலும் போட்டியில் இலாபத்தை இந்நாடு பெறுவதில்லை. இந்தக் கம்பனிகளும் பலவிதப்பட்ட ஒழுங்கற்ற சிறு போட்டிக் கூறுகளாகத் தோன்றுகின்றன. இவை, தேசிய நலனுடன் பொருந்தாத சுய நலனை நோக்காகக் கொண்டு தங்களுக்குள்ளும் ஏனைய தேயிலை உற்பத்தியாளர்களுடனும் ஏற்றுமதியாளர்களுடனும் போட்டியிடுகின்றனர். எமது தொழிற்பாடுகள் தேசிய நலன், தேசிய தேவை ஆகியவற்றுடன் இணைந்து போகுமாயின் உலகச் சந்தையில் நாம் எத்தகைய பலம் பெற்ற போட்டியாளராக இருப்போமென்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அப்போ, உலகத் தேயிலைச் சந்தையின் முழுவுரிமையாளர்கள் இலங்கை அரச வர்த்தக முழுவுரிமையில் முற்றிலும் வேறுபட்ட சக்தியொன்றை எதிர்த்து நிற்கவேண்டியிருக்கும். எமது, தேயிலைத் தோட்டங்கள் தனியொரு தோட்டங்களாகவோ தோட்டங்களின் தொகுப்புகளாகவோ நடாத்தப்படாது தேசிய நலன்கருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியொரு பெருந்தோட்டமாக அமைக்கப்படின் நாம் உயரக்கூடிய அளவைச் சுற்று சிந்தித்துப் பார்க்கவும், அவ்வழியால் நாம் முதலாளித்துவச் சந்தை உட்பட உலகச் சந்தையின் மிகப் பலம் பெற்ற போட்டியாளராக ஆகலாம். பிறருடைய தனிப்பட்ட நலன்கருதி எங்கோ தீர்மானிக்கப்பட்ட விலை மாற்றங்களுக்கு நம்மை சீராக்கிக், கொள்வதற்கும், இலங்கைத் தேயிலைத் தொழிற்சாலை குறைந்த பங்கை வகிக்கும் சந்தை அமைப்புகளுக்கு எம்மை சரியாக அமர்த்திக் கொள்வதற்கும் பதிலாக எமது நாட்டுக்கும் மக்களுக்கும் நலனளிக்கும் நியாயமான விலையை தீர்மானிக்க முடியுமாயிருக்கும்.

இந்த விவாதத்தில் தேயிலை ஒரு உதாரணமாக மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தேயிலைக்குப் பொருத்தமானவை யாவும் ஏற்றுமதி விவசாயமான பெருந்தோட்ட விவசாயப் பொருட்கள் யாவற்றுக்கும் பொருத்தமானவையாகும். இலங்கைப் பெருந்தோட்டங்கள் தொடர்பாகவும் அவற்றின் விளைபொருள் தொடர்பாகவும் அமையும் இத்தகைய நடவடிக்கைகள் பொதுவுடைமைப் பாதையில் நெடுந்தூரம் போவனவாகும்.

உண்மையாதெனில் நமது பொருளாதாரம் தற்போதிருக்கும் நிலையில், நாம், எம்மை நோக்கிவரும் முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க முடியாதுள்ளோம். நாம், மாளாது தொடர்ந்து வாழ வேண்டுமாயின் எமது பொருளாதாரத்தைத் திறம்படவும் மாறுந்தன்மையுடையதாகவும் செயற்படுத்த வேண்டும். அதன் பொருட்டு அதனை மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும். பொருளாதாரத்தை செயற்படுத்தவும் தூண்டி இயக்கவும் மட்டுமே அல்லாது பொளாருதாரத்தை திறம்படவும் நோக்கெல்லையுடையதாகவும் திட்டமிடுவதற்கும், அரசு, பிரதான உற்பத்தி, நிதி, ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றின் தொழில் முறைகள் மேல் கடும் பிடிப்பை வைத்திருக்க வேண்டியிருக்கும்.

இத்தகைய திட்டமிடலும் தூண்டலும் உணவுத் துறையில் மட்டுமன்றி விவசாயத்திலும் கைத்தொழில் அமைப்பிலும் கூட அமைதல் வேண்டும். இறக்குமதி செய்யப்படும் விவசாய கைத்தொழில் பொருட்களுக்கு பதிலீடு செய்தல், விவசாயஞ் சார்ந்த கைத்தொழில் ஆகியன மட்டுமன்றி நாம் தற்போது முதன்மையளிக்கும் விவசாயத் தேவையை வழங்கும் கைத்தொழில்களும் வருங்கால பொருளாதாரத் திட்டமிடலில் முக்கிய விடயங்களாதல் வேண்டும். எனினும் இவை நீண்ட கால அடிப்படையில் ஆராய வேண்டிய விடயங்களாதலால் அவற்றினை நாம் இப்போ ஆராயவில்லை.

உடனடி கருமங்கள் பற்றியே இந்த விரிவுரையில் விளக்கியுள்ளேன்

அரசியல் குறிப்பொன்றுடன் நாம் விரிவுரையை முடிக்க வேண்டும் போலும். இன்றைய பொருளாதாரத்தின் பிரச்சினைகள் அரசியல் பிரச்சினைகளாகவும் உள்ளன. தூயபொருளாதாரம் என்ற ஓர் விடயம் தற்போதில்லை. பழைய பதமொன்றை நான் பயன்படுத்த முடியுமாயின் அவை அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளாக அமையும். இந்த நெருக்கடியை எதிர் நோக்க எங்களுக்குத் தேவைப்படுவது அரசியல் தீர்மானங்களாகும். இந்தத் தீர்மானங்களை நாம் துணிவுடனும், திடகாத்திரமாகவும் இடைவிடாமலும் கடைப்பிடித்தல் வேண்டும். காலத்துக்கு உகந்த தன்மையில் செயற்பட நாம் அறிந்திருப்போமாயின் இந்நெருக்கடியிலிருந்து மீண்டு பொதுவுடைமைச் சமுதாய பொருளாதார அமைப்புக்கு நாம் நெருங்கிச் செல்வோம். ஆதலால் எம்மை நோக்கியுள்ள அவசரக்கருமங்களைச் செயலாற்ற நாம் ஆயத்தமாகுவோமாக.



# காங்கேசன்துறை இடைத் தேர்தலின் பின்னணி

காங்கேசன்துறை இடைத் தேர்தல் முடிவு தமிழரசுக் கட்சிக்கும் தமிழர் ஐக்கிய முன்னணிக்கும் ஒரு பெரிய ஏமாற்றமாகி விட்டதென்பது பலரின் கருத்து. இப்போதெல்லாம் அவர்கள் அது பற்றி பெருமை அடித்துக்கொள்வதில்லை. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தனது முன்னணி தமிழ்ப்பேசும் மக்களின் சார்பில் பேசக் கூடியதனிப்பெரும் பிரதிநிதி என்பதையும், இந்த மக்கள் புதிய அரசியற் சட்டத்தை நிராகரிக்கிறார்களென்பதையும், நிரூபித்துக் காட்டுவதற்காக தனது பாராளுமன்ற ஆசனத்தை ராஜிநாமா செய்து, மீண்டும் தேர்தலில் போட்டியிட்டார். இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வேட்பாளரான திருவி. பொன்னம்பலத்திற்குக் கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கையை அலட்சியமாக புறக்கணித்துவிடக் கூடிய அளவுக்கு குறைத்துவிடுவதும், தனது வாக்குகளின் தொகையை என்றுமில்லாதவாறு ஈடு இணையற்றதாகப் பெருக்கிகொள்வதும் தமிழர் ஐக்கிய முன்னணி வேட்பாளரினதும், அவாது தேர்தல் பிரச்சாரத்தினதும் ஒரே நோக்கமாக இருந்தது. இந்த நோக்கமின்றேல் இது முற்றிலும் எதுவித அர்த்தமுமில்லாத ஒரு நடவடிக்கையாக இருந்திருக்கும்.

ஆனால் இடைத் தேர்தல் முடிவு இந்த நோக்கத்தைச் சிதறடித்துவிட்டது. ஐக்கிய முன்னணியின் இடதுசாரி வேட்பாளர்ரான கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு வி. பொன்னம்பலம் 1970 மே மாதத் தேர்தலில் தான் பெற்ற வாக்குகளை விட அதிகமான வாக்குகளை இந்த இடைத் தேர்தலில் பெற்றார். இடைத்தேர்தலின் நிலைமையையும், திரு செல்வநாயகம் கட்டவிழ்த்து விட்டிருந்த ஒரு வித வெறியைத் தூண்டும் பிரச்சாரத்தின் நிலைமையையும் பார்க்கும்போது, இடதுசாரி வேட்பாளர் தனது வாக்குகளின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டது ஓர் ஐயத்துக்கிடமற்ற சாதனை மட்டுமின்றி, தமிழர் ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்ட ஓர் ஏமாற்றமாகும்.

இந்த இடைத்தேர்தலில் திரு செல்வநாயகத்தின் சாதனை 1970 மே மாதப் பொதுத் தேர்தலில் திரு சுந்தரலிங்கமும், தமிழ் காங்கிரஸ் வேட்பாளரும் பெற்ற வாக்குகளை இம்முறை தன்பால் ஈர்த்துக்கொள்வதில் அவர் பெற்ற வெற்றியே. 1970 மே மாதத் தேர்தலில் இந்த வேட்பாளர்கள், ''ஆலயப் பிரவேசப்'' பிரச்சினையில், குறிப்பாக காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள மாவிட்டபுரம் கோயில் ஆலயப் பிரவேசப் பிரச்சினையில், தமிழரசுக் கட்சியின் போக்கினை ஆதரித்து நின்றனர் என்பது பகிரங்க இரகசியமாகும். இந்த ஆலயத்துள் சிறுபான்மைத் தமிழ் மக்கள் (தாழ்த்தப்பட்ட சாதியினர் என்போர்) பிரவேசிப்பதை எதிர்த்து உயர்சாதி என்னும் பிற்போக்குச் சக்திகள் ஆலயத்தை முற்றுகையிட்டதை அடுத்து அப்பொதுத் தேர்தல் நடை பெற்றதால், இந்து சமய சீர்திருத்தத்துக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் ஒரு சந்தர்ப்பமாக அத்தேர்தல் பயன்படுத்தப்பட்டது. வேதாந்தத்தின் மேன்மையைப் பாதுகாத்து நிற்கும் ''பாதுகாவலர்கள்'' என்போர் சாதியின் பெயரால் சலுகைகளைப் பெறவும், சர்திப்பாகுபாடுகளைப் பாராட்டவும் தங்களுக்குள்ள உரிமையைத் திரு சுந்தரலிங்கமும், மக்களுக்குத் தெரியாத தமிழ் காங்கிரஸ் வேட்பாளரும் ஆத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரித்து நிற்றதைக் கண்டனர். இவ்வேற்பாளர்கள், குறிப்பாக திரு சுந்தரலிங்கம் இந்த பத்தாம் பசளி பகுத்தறிவற்ற இழிந்த உணர்ச்சிக்கு வெட்கமின்றி துணை செய்தார்கள். இடைத்தோதலில் இந்தப் பிற்போக்காளர்கள் தங்களுக்கென தனியொரு கொடியை வைத்திருக்கவுமில்லை' தங்களின் சொந்த வேட்பாளர் ஒருவரை போட்டிக்கு நிறுத்தவுமில்லை. தண்ணீருக்குத் தன் மட்டம் தெரியும் என்று கூறுவதுண்டு. திரு செல்வநாயகமும் தன் மட்டத்தைத் தானே தெரிந்திருந்தார். இடைத்தேர்தலில் ஐக்கிய முன்னணி இடதுசாரி அபேட்சகர், திரு செல்வநாயகம் ஆகிய இரு வேட்பாளர்களில் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய வேளை வந்த பொழுது, திரு செல்வநாயகம் மேற்கண்ட பிற்போக்குச் சக்திகளின் இயல்பான தலைவராகியிருந்தார். ஐக்கிய முன்னணி வேட்பாளர் திரு. வி. பொன்னம்பலத்துக்கெதிராக அவர்கள் அனைவரும் திரு செல்வநாயகத்தின் பக்கம் சென்று அவரின் வாக்குகளைப் பெருக்கினார்கள். ஆகவே இந்த இடைத் தேர்தலில் திரு செல்வநாயகத்தின் சாதனை என்னவெனில், வலதுசாரி தமிழ் பிற்போக்கின் ஈடுயிணையற்ற தலைவராகத் தன்னைத் தேர்ந்தெடுக்கும்படி செய்ததே.

உண்மையில் தமிழரசுக் கட்சியின் பணியே இதுதான். இக்கட்சி தமிழ் சொத்துரிமையாளர், தமிழ் தொழிலதிபர்கள், தமிழ் வர்த்தகர்கள், பொதுவாக தமிழ் சுரண்டுபவர்கள் ஆகியோரின் வர்க்க நலன்களைப் பாதுகாப்பதற்காக தமிழ் சிறுபான்மையோரின் நியாயமான குறைபாடுகளைப் பெருமளவில் பயன் படுத்துகிறது. தமிழரசுக் கட்சி தமிழ் சிறுபான்மையோரின் குறைபாடுகளுக்குத் தீர்வுகாண விழையவில்லை. அதன் நோக்கமெல்லாம் தமிழர் மத்தியிலுள்ள சுரண்டுபவர்களின் நலவுரிமைகளைப் பேணுவதற்காக அக்குறைபாடுகளைப் பயன்படுத்துவதே.

தொழில் வழங்குவதில் பாகுபாடு காட்டுதல், பல்கலைக் கழகப் பிரவேசத்தில் தரப்படுத்தும் முறையைக் கையாளுதல், தமிழை அரச மொழியாக அரசியற் சட்டம் மூலம் அங்கீகாரம் அளித்தல் ஆகிய இன்றையப் பிரச்சினைகளுக்கு இது ஒரு தீர்வு என்றால், அதற்காக காங்கேசந்துறைத் தமிழர்கள் கண்டுபிடிக்ககூடிய மிகச் சிறந்தகருவி ஆளும் ஐக்கிய முன்னணி கட்சிகளொன்றின் தமிழ் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்வதே. அதாவது: இந்த இடைத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டியவர் கம்யூனிஸ்ட் கட்சியின் திரு பொன்னம்பலமே தவிர, தமிழரசுக்கட்சியின் திரு செல்வநாயகமல்ல, வேட்பாளர்களிடயுள்ள வேற்றுமை அவர்களின் அரசியல்களிடையுள்ள வேற்றுமையாகும்.

திரு. செல்வநாயகம் வாயிலாகவோ, தமிழரசுக் கட்சி மூலமாகவோ தமிழர்கள் அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தம் கொண்டு வரமுடியாது. அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்க கூடிய ஒரு வழியைத் தேடிக் கொள்வது தமிழ் மக்கள் முன்னுள்ள அரசியல் பிரச்சினையாகும். இந்த முக்கிய பணியை நிறைவேற்றும் ஆற்றல் தமிழரசுக் கட்சிக்குக் இடையாது. இதனைச் செய்யக்கூடிய ஆற்றலும் விருப்பமும் கொண்ட ஸ்தாபனங்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தொழிலாளர் வர்க்கக் கட்சிகள் மாத்திரமே. இந்தத் துறையில் தமிழர் ஐக்கிய முன்னணித் தலைமைக்கு அக்கறையே இடையாது. அதன் அக்கறையெல்லாம் தங்கள் வர்க்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தமிழ் சிறுபான்மையோரின் குறைபாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதே - அதாவது முதலாளித்துவ நலன்களைக் காப்பதற்காக பிற்போக்கினதும் ஏகாதிபத்தியத்தினதும் முகாமுக்குள் தமிழ் மக்களை இழுத்துச் செல்வதே.




# THE NATION

*The Nation's*
*Leading English political weekly*
*With Articles on*

- Economics
- Politics
- International Affairs
- Education
- Labour Front
- Art
- Sciencc
- Sport etc.

**OUT EVERY FRIDAY**

***Subscriptions:—***

**Rs. 9.00 Half yearly**
**Rs. 17.00 Yearly**

***INQUIRIES:***
**108, Kew Road,**
**COLOMBO 2.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SURIYA BOOK SHOP

For The Latest Literature

on

Politics — Marxism—Socialism

457. Union Place,
Coiombo.

ஜெய லலிதா

நகை மாளிகை

தேவையான தங்க நகைகள்

குறித்த தவணையில் தரப்படும்.

65, செட்டியார் தெரு,
கொழும்பு—11.

விஜயம் செய்யுங்கள்

சேகர்ஸ் ஜுவல்லர்ஸ்

44, செட்டியார் தெரு,
கொழும்பு—11

தங்க வைர நகை வியாபாரம்

எல்லா விதமான — நவீன தினுசு நகைகளும் உண்டு
ஆர்டர்கள் குறித்த தவணையில் திருப்திகரமாக
நிறைவேற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான தங்க நகைகளுக்கு தகுந்தது
நம்பிக்கைக்குப் பாத்திரமானது

லலிதா

நகை மாளிகை

99—105, செட்டியார் தெரு,
கொழும்பு—11

தொலைபேசி: 23691

சிவயோக
நகை
மாளிகை

தங்க பவுன் நகை வியாபாரம்

54, செட்டியார் தெரு
கொழும்பு—11

தொலைபேசி: 21617 (Ex. 3 Lines) தந்தி: "NITKALSTO"

இன்றே விஜயம் செய்யுங்கள்

நித்திய கல்யாணி

நகை மாளிகை

தங்கம் வைரம் நகை வியாபாரம்

40, செட்டியார் தெரு,
கொழும்பு—11

அபிவிருத்திக்கு
இரத்தினமயமான பாதை உண்டு..............
மாணிக்க கல் ஏற்றுமதியால்
இலங்கை சம்பாதித்த வெளிநாட்டு நாணயம்...........

**1972 - ரூ. 1.5 கோடி**
**1973 - ரூ. 15.5 கோடி**
**1974 - ரூ. 13.2 கோடி**

நாட்டுக்கு இன்றியமையான வெளிநாட்டு நாணயத்தைச்
சம்பாதித்துக் கொடுக்கும்
அரச மாணிக்கக் கல் கூட்டுத்தாபனம்
இரத்தினமயமான பாதையில் நடைபோடுகிறது..............

## அரச மாணிக்கக் கல் கூட்டுத்தாபனம்

**24, யோர்க் வீதி,**

**கொழும்பு-1.**

# இலங்கை வங்கி

## கிராம மக்களின் உதவிக்கு விரைகிறது.

தற்போது நிறுவப்பட்டு வரும் விவசாய
சேவை நிலையங்கள் அனைத்திலும்
அமைக்கப்படும் தனது கிளைக் காரியாலயங்கள்
மூலம் உற்பத்தியைப் பெருக்கும்
தேசிய முயற்சியில்
இலங்கை வங்கி பங்குபற்றுகிறது.

இலங்கையில் மிகப் பெரிய வங்கியின் நிகரற்ற
பணச் செல்வமும் அனுபவமும்
விவசாயின் வாயிற்படிக்கே
கொண்டுவரப்பட்டுள்ளன.

எண்ணிக்கையில் 200க்கு மேலான
விவசாய சேவை நிலையங்களிலே
இச்சேவை பெற்றுக் கொடுக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STATE

**A Marxist Quarterly
Out Shortly**

# රජය

**මාර්ක්ස්වාදී
ත්‍රෛමාසිකය**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவன் கவலையின்றி வாழ உதவுங்கள்



பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் பிற்காலத்தில் கவலையின்றி வாழ வழி வகுக்க ... இதுவே. அத ... வழி. கவலை ... தேவை. ... பெயரில் ஒரு ... தைத் தொடங்கி ... பணத்தைய ... வசதி யுள்ள வேலை ... தொகையை மென்மேலும் ... செய்யுங்கள் உங்கள் அ ... யும் சேமிப் புக் கணக்கும் ... வளர்வதைக் காணுங்கள். ... வளர்ந்ததும் பிறர் உதவியை நாடாது வாழ்வதற்குப் போதுமான பணம் அதனி ... க்கும். இதற்கு ஏற்ற திட்டமா ... சுவையமான வழி, மக்கள் வங்கி முதலீட்டுச் சேமிப்புக் கணக்கு ஒன்றை ஆரம்பிப் பதே. குறைந்தது 60 மாதங்களுக்கு ஒவ்வொரு மாதமும் 5/. ரூபாவையோ அதின் மடங்குத் தொகைகளையோ பிள்ளையின் பெயரில் போடுங்கள். வயது வராதோரின் முதலீட்டுச் சேமிப புக் கணக்குத் திட்டத்தின் கீழ் வருடாந் தம் ... வட்டி கிடைக்கிறது. அது மட் ... குறைந்த பட்சம் 60 மாதங்களுக்குப் பணம் கட்டியிருந் தால் உங்கள் மகனோ மகளோ 21 வயதை அடைந்ததும் முதலீட்டுச் சேமிப்புக் கணக்கின் கால அளவுக்கு ஏற்ப ... கட்டுவதற்கான குறுகிய கால ... அது நீண்ட காலக் கடன் வசதி ... றும் வாய்ப்பும் உண்டு.

**உங்கள் சாதனையைப் பாருங்கள்!**

**இன்றே மக்கள் வங்கிக் கிளை ஒன்றுக்குச் சென்று இச் சேமிப்பு முறையைப் பற்றி மேலும் விசாரியுங்கள்**

vividarts

## மக்கள் வங்கி

இலங்கையில் ஆகக் கூடுதலான கிளைகளை உடையது, உலகம் முழுவதும் பிரதிநிதிகள் கொண்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து வருடத்தில் பணத்தை இருமடங்காக்கி

# ஒன்றுக்கு

நீங்களும் நாடும்
வளம் பெற
வழிகோலுகிறது
சேமிப்புச் சான்றிதழ்

- சிக்கனமானது
- அரசாங்க உத்தரவாதம் கொண்டது.
- வருமான வரிச் சலுகை
- உங்களதும் பிள்ளைகளதும் வருங்காலத்திற்கு உதவுகிறது.

# இரண்டு

## தேசிய சேமிப்பு வங்கி

தலைமை அலுவலகம்: சேமிப்பு வங்கிக் கட்டிடம், த. பெ. இல. 1732 255, காலி வீதி, கொழும்பு - 3
தொலைபேசி எண்: 20101 - 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னஞ் சாராயம்

தற்சமயம் தென்னஞ்சாராயம் அதிக அளவில் உள்ளதென்பதையும் எல்லாத் தவறணைகளிலும் வெளிநாட்டுப் பான விற்பனை நிலையங்களிலும் கட்டுப்பாடின்றிக் கிடைக்குமென்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

விலைவாசிகள் உயர்ந்துள்ள போதிலும் எமது வாடிக்கையாளருக்கு நிறை சத்துள்ள பானமொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக குறைந்த விலையிலேயே அதாவது போத்தலொன்று ரூபா 15/- ஆக விற்கின்றோம். இப்பானமானது அதி சிறந்த தென்னங்கள்ளிலிருந்து வடிக்கப்பட்டு தரமுயர்ந்த கலங்களில் பேணப்பட்டுள்ளது. இது வேற்றுப் பொருள் கலப்பில்லாத தூய தென்னஞ் சாராயமாகும்.

அரச வடிசாலைக் கூட்டுத்தாபனம்.




ரூ.15/-

TAL 1591


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவகால பயணச் சீட்டால் போக்குவரத்து இலகுவாகும்

நீங்கள் அடிக்கடி பஸ் பிரயாணம் செய்கிறீர்களா? அப்படியானால் பருவகாலச் சீட்டு பெற்றுக்கொண்டால் உங்களின் நேரமும் பணமும் மீதமாகும்.

**விற்பனை இடம்:**

சகல இ.போ.ச டிப்போகள், புறக்கோட்டை, கண்டி, குருநாகல். மத்திய பஸ் அலுவலகங்கள்; கொழும்பில் விசேட விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில்.

**திகதி**

நடப்பு மாதம் 26ந் திகதி முதல் அடுத்த மாதம் 5 ந் திகதி வரை.

**நேரம்:**

முற்பகல் 8.00 முதல் பிற்பகல் 5.30 வரை. மாதத்தின் கடைசி இரு நாட்களிலும் அடுத்த மாதத்தின் ஆரம்ப மூன்று நாட்களிலும் பி.ப. 6.00 வரையும், சனி, ஞாயிறு, பொது விடுமுறை தினங்களில் பி.ப. 1.00 வரை. விசேட விற்பனை நிலையங்களில் பி.ப. 2.30 முதல் பி. ப. 6.30 வரை சனி, ஞாயிறு பொது விடுமுறை தினங்களில் மு. ப. 8.30 முதல் பி. ப. 1.00 வரை.

**மாறிச் செல்லுதல்:**

பிரயாணத்தின் போது 4 முறைகள் மட்டுமே ஒரு பஸ் வண்டியிலிருந்து மற்றொரு பஸ் வண்டிக்கு மாறமுடியும். ஒவ்வொரு முறையும் மாறும் போது பஸ் கண்டக்டர் சீட்டில் ஒரு சிறு புள்ளடி போடுவார். பருவகால பயணச் சீட்டு பெற்றுக் கொள்ளும் போது மாறிச் செல்லுதல் பற்றி அதில் குறிப்பிடப்படாதிருந்தால், மாறிச் செல்ல அனுமதி கிடைக்காது. மாறிச் செல்ல வேண்டிய அவசியமில்லாத போது அதற்குரிய சதுர இடத்தில் ஒரு பெரிய புள்ளடி போட்டு செல்லாதாக்கப்படும்.

**வயது வந்தோர் பருவச்சீட்டு இரு வகை**

1. 21 நாட்களுக்குச் செல்லும் பருவகால பயணச் சீட்டு (ஐந்துதின வாரம்)
2. 25 நாட்களுக்குச் செல்லும் பருவகால பயணச் சீட்டு (ஆறு தின வாரம்)

பயணச் சீட்டு வழங்கும் போது பிரயாணம் செய்யமுடியாத நாட்கள் வெட்டிவிடப்படும். தனக்குத் தேவையான நாட்களை இரத்து செய்துகொள்ள பயணச் சீட்டு பெற்றுக் கொள்பவருக்கு முடியும். அத்துடன் அவர் தனக்குத் தேவையான நாட்களை இரத்துச் செய்து கொள்ளவும் வேண்டும்.

**பாடசாலை மாணவர்களுக்கு**

அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைப் பிள்ளைகள், வருட ஆரம்பத்தில் மாணவர் மாணவி படிக்கும் பாடசாலை, வகுப்பு, வயது ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலை அதிபரின் ஒரு சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். அது விலாசம் அச்சிடப்பட்ட கடுதாசியிலோ, பாடசாலையின் ரப்பர் முத்திரையிடப்பட்ட கடுதாசியிலோ எழுதப்பட்டிருக்க வேண்டும். சான்றிதழ் இல்லையேல், கடந்தமாதப் பயணச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பட்டதாரி மாணவர்கள்**

சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகச் செயலாளரின் சான்றிதழுடன் சேர்த்து அடையாளச் சீட்டையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பிடத்தக்கது**

பருவகாலப் பயணச் சீட்டைப் பிறர் உபயோகிக்க அனுமதிக்க கூடாது. சீட்டை பயணச் சீட்டுக்கான கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. சீட்டை உபயோகிக்கும் ஒவ்வொரு முறையும் பஸ் கண்டக்டரைக் கொண்டு அதில் குறிப்பிடச் செய்தல் வேண்டும்.

**மோசடியாக உபயோகித்தல்**

அனுமதியின்றி மாற்றங்கள் செய்தால் பயணச் சீட்டு செல்லாதாகிவிடுவதுடன், மோட்டார் போக்கு வரத்துச் சட்டத்தின் 74 (2) வது பிரிவின்படி ரூ. 500 அபராதமோ 6 மாத சிறைத் தண்டனையோ, அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

**நேரத்தையும் பணத்தையும்**

**மீதப்படுத்துங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org